தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 229

அரிச்சந்திர நாடகம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சை சரசுவதி மகால் நூலக வெளியீடு எண் : 229

அரிச்சந்திர நாடகம்

(வீரைலிங்கபாரதி இயற்றியது)

பதிப்பாசிரியர்

புலவர் **ச. திலகம்**, பி.லிட்.,
தமிழ்த் துறை,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

2006 விலை: ரூ. 25-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: அரிச்சந்திர நாடகம்
பதிப்பாசிரியர்	: புலவர். ச. திலகம்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	: 229
மொழி	: தமிழ்
பதிப்பு	: இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: அக்டோபர், 2006
தாள்	: டி. என். பி. எல். 18.6 கி. கி.
நூல் அளவு	: 24 X 14 செ. மீ.
பக்கங்கள்	: 70
படிகள்	: 250
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	: மெலிந்த அட்டை
பொருள்	: நாடகம்
விலை	: ரூ. 25-00

வெளியீட்டாளர் முகவுரை

அரிச்சந்திரனின் வரலாற்றைக் கூறும் பல சுவடிகள் பல நிலைகளில் எமது நூலகத்தில் உள்ளன. அதன் விவரம் வருமாறு. எமது நூலகத்தில் சுவடி எண்.604ஐயும் டி.எண்.643 ஐயும், கொண்டதாக விளங்குகிறது.

அரிச்சந்திர புராணம் சுவடி எண்.303, 304, 305, 306 (ஏ) 308, 309, 310 அரிச்சந்திரன் கதை சுவடி எண்.202, 203, 204, 205, 206, 207.

அரிச்சந்திரன் அம்மானை சுவடி எண். 1386 அரிச்சந்திர கீர்த்தனை சுவடி எண்.1508, அரிச்சந்திர நாடகம் சுவடி எண். 603, 604, 605, 1474 மேற்கூறிய சுவடிகளில் பூர்த்தியாயும், அபூர்த்தியாயும் உள்ளன.

இச்சுவடி மிகச் சிதிலமாக உள்ளது. இந்நூலின் ஆசிரியர் வீரைலிங்க பாரதி என இந்நூலின் 3ஆம் பாடலால் அறிய முடிகிறது. இப்பாடலின் முதல் பாடலிலும், இரண்டாம் பாடலிலும் விட்டவாசல் கணபதியை கூறியிருப்பதனால் இவருடைய ஊர் விட்டவாசலா அல்லது இவர் பெயரின் முன் உள்ள வீரை என்ற சொல்லினால் வீரையம்பதியா என்பது ஆராய்ச்சிக்குரிய செய்தியாக உள்ளது. மேலும் இவ்வாசிரியரைப் பற்றிய பிற செய்திகள் அறிய இயலவில்லை. இச்சுவடி எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதற்கு காலத்தையறிய நூலில் எவ்விதச் சான்றும் இல்லை.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த அரிச்சந்திரனுடைய வரலாறுதான், அரிச்சந்திரக் கீர்த்தனை. அரிச்சந்திரவெண்பா, அரிச்சந்திர அம்மானை, அரிச்சந்திர நாடகம் முதலிய வடிவில் கூறப்பெற்றுள்ளன. எமது நூலக சுவடி எண்.604 அரிச்சந்திர நாடகமாக உள்ளது.

இது பழைய கதை என்றாலும் நாடகரூபத்தில் எழுதப்பட்டுள்ள பாட்டுக்கள் மிக நன்றாக உள்ளன. இந்நாடக நூலில் விருத்தம், தரு, கீர்த்தனை, அகவல் முதலியன விரவி வந்துள்ளன. விசுவாமித்திரர் அரிச்சந்திரனை கோபத்தால் எட்டி உதைக்கும் பொழுது அவர் திருவடிகள் தன் மீது விழுந்ததை எண்ணி, என்ன பாக்கியஞ் செய்தேன் என்று கீர்த்தனை வடிவில் அழகாக அதனை ஆசிரியர் கூறியுள்ளார். மேலும் சந்திரமதி அரிச்சந்திரிரனை விட்டுப்பிரியும் நிகழ்ச்சியைப் பார்த்து புலம்புவதை தரு வடிவில் மிக அழகாக கூறியுள்ளார். இங்ஙனம் பல இடங்கள் இந்நூலில் நயம்பட அமைந்துள்ளன.

இச்சுவடிகளின் சொற்சுவை, பொருட் சுவை மேம்பட இந்நூலக தமிழ்துறை புலவர் ச. திலகம் அவர்கள் பதிப்பித்துள்ளார்கள். இந்நூல் தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவருகிறது.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், எம்.ஏ,. அவர்களுக்கும், இந்நூல் கணினியில் வெளிவர கணினி பிரிவில் பணியாற்றிய அனைவருக்கும் எனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சா. விஜயராஜ் குமார், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
8-10-2006.

முன்னுரை

இவ்வையகத்து மக்கள் நல்வாழ்வு எய்தி மேனிலையுற நல்லொழுக்கம் மிகமிக இன்றியமையாதது. நல்லொழுக்கத்துள் தலையாயது வாய்மை காத்தல். இவ்வுண்மையை கீழ்க்கண்ட பொதுமறையானும் உணரலாம்.

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.

நல்லொழுக்கம் அனைத்திற்கும் உயிராக நிற்பது வாய்மையாகும். வாய்மை என்பது உள்ளமும் வாக்கும் ஒத்திருத்தல் என்றனர் மனு. வாய்மை என்பதனை வட நூலால் சத்தியம் என்பர். கடவுள் சத்திய வடிவாக விளங்குகிறார். சத்தியத்தைக் கடைப்பிடித்த ஒருவனை மூவர்களாலும் வெல்ல முடியாது. பஞ்ச பூதங்களும் அவனையணுக அஞ்சுகின்றன. கடல் சூழ்ந்த உலகில் எல்லோருடைய உள்ளத்திலும் ஒருவன் உறைய வேண்டுமாயின் உண்மையைக் கடைபிடிக்க வேண்டும். பொய்கூறாத நன்னெறி உடையான் எக்காலத்தும் எல்லோரும் மனத்தின்கண் வைத்துப் போற்றத் தகந்தவனாகின்றான். மெய்யே பேசுகின்றவனுடைய மனமானது எப்போதும் சாந்தியாகவும் கவலையற்றுமிருக்கம். பொய்யே பேசும் புன்மையோரை வறுமைப்பிணி வந்து வாட்டும் தெய்வத் திருவருளுண்டாகாது. பொய்யுடையான் வாக்கால் உச்சரிக்கும் மந்திரங்களும் பலனை நல்கா. ஒரு கோடி பொன்தருவதாகக் கூறினும் பொய் கூறுதல் தகாது.

இங்ஙனம் வாய்மையே நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர் பலர். பீஷ்மர் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக விவாகம் செய்து கொள்ளுவதில்லையென்றும், மனத்தாலும் மாதரைத் தீண்டேன் என்றும் சபதம் புரிந்தவர். பின்னர் ஒரு காலத்தில் அவருடைய சிற்றன்னையாகிய சத்தியவதி பீஷ்மரை நோக்கி மைந்தா! நம்முடைய சந்திரகுலம் சந்ததியற்று விடுகிறது. குலத்தை விருத்தி செய்யும் பொருட்டு நீ ஒரு கன்னிகையை மணந்து

உலகத்தை அரசாண்டு புதல்வரைப் பெறுவாய் என்றனள். உடனே பீஷ்மர் அம்மா இந்த மூன்று உலகங்களையும் இன்னும் இவற்றிற்கு மேலாக எதையும் நான் இழந்து விடுவேன். சத்தியத்தை மட்டும் நான் தவிரேன். மண் தன் இயல்பாகிய குணமாகிய கந்தத்தையும், நீர் தனது தண்மைக் குணத்தையும் அனல் வெம்மை ஒளி முதலிய குணங்களையும், வாயு பரிசகுணத்தையும் சூரியன் தன் காந்தியையும், சந்திரன் தன் குளிர்ச்சியையும், ஆகாயம் சப்த குணத்தையும், அறக் கடவுள் தனது தரும குணத்தையும் இழந்து விடினும் விடலாம். நான் மட்டும் சத்தியத்தை ஒரு போதும் விடேன், என்றார்.

வேறொரு சமயத்தில் காசிராஜன் மகளாகிய அம்பை என்பவளை மணந்து கொள்ளுமாறு பீஷ்மருடைய குருநாதராகிய பரசுராமர் பீஷ்மரை மன்றாடிக் கேட்டுக் கொண்டார். அக்கால் பீஷ்மர் பரசுராமரை நோக்கி குருநாதர் என் தந்தை பொருட்டு மாதரை மணம் புரிவதில்லையென முன்னரே விரதம் கொண்டுள்ளேன்.

தாங்கள் எனக்குக் குருமூர்த்தி தங்களைத் தவிர எனக்குச் சிறந்த தெய்வமில்லை. விவாகம் புரிவதில்லை என்ற சொல்லை ஒருபோதும் வழுவேன். அடியேனுடைய உயிரை வேண்டுமாயினும் தருவேன் என்று சொல்லிய உறுதிமொழிகளையும் மறக்க இயலுமா? மேலும் உயிரினும் உண்மையே சிறந்தது. ஆவிக்கு மோசம் வரினும் சத்தியத்தை விடக்கூடாது.

அதுபோன்று கர்ணனும் சொன்ன சொல் தவறாமல் கிழப்பிராமண வடிவங்கொண்டு, வந்த இந்திரனிடம், தன் உடம்பில் உயிருக்கு ஆதாரமாக விளங்கம் கவசகுண்டலங்களை தன் வாளாயுதத்தால், உடம்பினின்றுஞ் சேதித்துக் கொடுத்து, அழியாப் புகழை எய்தினான்.

இவர்களைப் போன்று, வாய்மையெனும் பெருமலையின் உச்சியில் நின்றுரைத்த அரிச்சந்திரனை உணராதார் யார் உளர்?

இத்துணைச் சிறப்பு வாய்ந்த அரிச்சந்திரனுடைய வரலாறுதான் அரிச்சந்திரக்கீர்த்தனை, அரிச்சந்திரவெண்பா, அரிச்சந்திர அம்மானை, அரிச்சந்திர நாடகம் முதலிய வடிவில் கூறப் பெற்றுள்ளன. அவ்வகையில் இந்நூல் அரிச்சந்திர நாடகமாக உள்ளது.

இது பழைய கதை என்றாலும் நாடகரூபத்தில் எழுதப்பட்டுள்ள பாட்டுக்கள் மிக நன்றாக உள்ளன. இந்நாடக நூலில் விருத்தம், தரு, கீர்த்தனை, அகவல் முதலியன விரவி வந்துள்ளன. விசுவாமித்திரர் அரிச்சந்திரனை கோபத்தால் எட்டி உதைக்கும் பொழுது, அவர் திருவடிகள் தன் மீது விழுந்ததை எண்ணி, என்ன பாக்கியஞ் செய்தேன் என்று கீர்த்தனை வடிவில் அழகாக அதனை ஆசிரியர் கூறியுள்ளார். மேலும் சந்திரமதி அரிச்சந்திரனை விட்டுப் பிரியும் நிகழ்ச்சியைப் பார்த்து புலம்புவதை தரு வடிவில் மிக அழகாக கூறியுள்ளார். இங்ஙனம் பல இடங்கள் இந்நூலில் நயம்பட அமைந்துள்ளன.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த சுவடி எமது நூலகத்தில் சுவடி எண்.604-ஐயும், D.No.643-ஐயும், கொண்டதாக விளங்குகிறது. மேலும் அரிச்சந்திரனின் வரலாற்றைக் கூறும் பல சுவடிகள் பல நிலைகளில் எமது நூலகத்தில் உள்ளன. அதன் விபரம் வருமாறு.

அரிச்சந்திரபுராணம் சுவடி எண்303,304,305,306 (a), 308,309,310 அரிச்சந்திரன் கதை சுவடி எண்.202,203,204, 205,206,207.

அரிச்சந்திரன் அம்மானை சுவடி எண்.1386, அரிச்சந்திர கீர்த்தனை சுவடி எண்.1508,. அரிச்சந்திரநாடகம் சுவடி எண்.603,604,605,1474. மேற்கூறிய சுவடிகளில் பூர்த்தியாயும், அபூர்த்தியாயும் உள்ளன.

இச்சுவடி மிகச் சிதிலமாக உள்ளது. இந்நூலின் ஆசிரியர் வீரைலிங்கபாரதி என இந்நூலின் 3ஆம் பாடலால் அறிய முடிகிறது. இப்பாடலின் முதல் பாடலிலும், இரண்டாம் பாடலிலும் விட்டவாசல்

கணபதியை கூறியிருப்பதனால் இவருடைய ஊர் விட்டவாசலா அல்லது இவர் பெயரின் முன் உள்ள வீரை என்ற சொல்லினால் வீரையம்பதியா என்பது ஆராய்ச்சிக்குரிய செய்தியாக உள்ளது. மேலும் இவ்வாசரியரைப்பற்றிய பிற செய்திகள் அறிய இயலவில்லை. இச்சுவடி எந்த நூற்றாண்டில் எழுதப்பட்டது என்பதற்கு காலத்தையறிய நூலில் எவ்விதச் சான்றும் இல்லை.

இந்நூல் வெளிவரப் பொருளுதவி செய்த நமது நடுவண் அரசுக்கும், இதனைப் பதிப்பிக்க அனுமதியளித்த எங்கள் நூலக முன்னாள் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திரு R. சத்பதி. இ.ஆ.ப. அவர்கட்கும், இந்நூலுக்கு அணிந்துரை தந்து சிறப்பித்த தற்போதய இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான உயர்திரு து. இராமசாமி, இ.ஆ.ப., அவர்கட்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது சரஸ்வதி மகால் நூலக நிருவாக அதிகாரி (பொறுப்பு) திருவாளர் A.பஞ்சநாதன்,எம்.ஏ.,பி.லிப்.எஸ்.ஸி., அவர்கட்கும், விரைவில் அச்சிட்டுதவிய தஞ்சை ஜெமினி அச்சகத்தார்க்கும் எனது நன்றி உரித்தாகிறது.

இந்நூலில் ஏதாகிலும் குற்றங் குறைகள் இருப்பின் அவைகளை திருத்தங்கொண்டு வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன். மேன்மேலும் பல நூல்கள் வெளிவர இறையருள் முன்னிற்கட்டும்.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
22.12.85.

புலவர் ச. திலகம்,B.Litt.,
தமிழ்த் துறை,
சரசுவதி மகால் நூலகம்.

ஓம் ஸ்ரீ மஹா கணாதிபதயே நம:

அரிச்சந்திர நாடகம்

மதிவளர் குடையான் செங்கோல்
மனுவென நடத்தி வாய்மை
அதிசெயம் படைத்த கோமான்
அரிச்சந்திரன் கதையைப் பாடத்
துதிசெயப் பொருளு மீய்ந்து
தொண்டர்வெவ் வினையுந் தீர்த்து
கதிதரும் விட்ட வாசல்
கணபதி காப்புத் தானே. 1

இந்திரன் சபையின் முன்னா
ளிருமுனி வாது கூறி
வந்திடுஞ் சோத னைக்கு
வாய்மொழி தவறா மன்னன்
ஐந்தரு நிகர யோத்தி
அரிச்சந்திரன் கதையை பாடல்
கந்தவேள் விட்ட வாசல்
கணபதி காப்புத் தானே. 2

அன்னபார் புரக்கும் வேந்தன்
அரிச்சந்திர நாட கத்தை
சொன்னபா வலர னேகர்
சொல்லினு மதுரப் பாடல்
மன்னபா ரதிசெஞ் சொல்லால்
வடித்துரை யென்ன வீரைப்
பன்னமா மறையோன் லிங்க
பாரதி பாடி னானே. 3

அகவல்

பொன்னுல கந்தனிற் புரந்தர னிருந்த
நன்னெடுங் கொலுவில் நான்மறை முனிவோர்
தங்களை நோக்கி சகல லோகத்து
பொங்கொளி யரசரிற் பொய்யுரை செய்யா
மன்னவ ரெவரேனும் வாசவன் முன்னே
தன்னிக ரிலாஅரிச் சந்திரனென் சீஷ
னவனுள னெனினு மருந்தவ வசிட்டனைக்
கவுசிகன் முனிந்து காவலன் பொய்சொலப்
புரிவன யானெனும் போதுளங் லூற்றே.
இருவரும் சபதம் எமக்கிது வென்னா
விண்ணா டிழந்து விசுவா மித்திர
தண்ணார் முடியரிச் சந்திரனை யணுகி,
ஆனை மேல்கவண் கலாலெ றிந்துயரம்
போனவத் தூரம் பொன்தரு கென்று
தந்த பொன்னையு மவன்வச மாக்கியும்
விந்தைசேர் துட்ட மிருகங்க ளாலவன்
நாட்டை யழித்தும் நாபதி மிருக
வேங்கை போங்காணில் வெம்புலைப் பாணக்
கன்னியர் தம்மை கலந்திட விடுத்தும்
பொன்னணி மகுடம் பொடிபட உதைத்தும்
நல்வளம் பொருந்தும் நகரொடு நாடுஞ்
செல்வ மத்தனையும் வாய்த்தெண்டம் கொண்டும்
நல்கிய செம்பொன்னாம் வைத்ததப் புறம்போய்
நல்கென வனுப்பியும் நாக்கெடு விட்டும்
நாரிலாக் காட்டில் நட்சத்திர னெனும்
தாரகனை விடுத்துத் தான்மரிப் பித்தும்
பெண்டொடு பிள்ளை பிராமணன் றனக்குத்
தொண்டென வடிமைத் தொழில்புரி வித்தும்
உண்டாகிய பொன்னும் ரொக்கமும் பற்றியும்
சண்டாள குத்தனை விலைப் படுத்தியும்
சந்திர மன்னனை சுடலைகாற் பிற்றும்
மைந்தனைப் பாம்பால் மடியப் பண்ணியும்

சந்திர மதியாற் றன்மகன் பிணத்தை
அந்தார வனத்தில் அழுதெடுப் பித்தும்
தவறிலா மன்னன் கணக்கிடு காட்டில்
அவன்படுந் துயர மறியப் படுத்தியும்
பிள்ளை செத்ததுக்கும் பெண்டிர் தன்னைக்
கொள்ளி வைப்பதுக்கும் கூலிகேட் பித்தும்
சந்திரமதி மடிதனில் காசிராசன்
மைந்தனைக் கொன்று வழியில் வீழ்வித்தும்
கோவிள மதலையை கொன்றபே யென்றும்
காவலர் பிடித்துக் கட்டமுட்டு வித்தும்
சொன்ன பைந்தொடியைச் சுடலைக் காற்றிருந்த
மன்னவன் வாளால் வதைக்க ஒப்புவித்தும்
பொய்யா வசனப் புரவலன் தனக்கு
கையால் மான்மழுக் கடவுளே முதலாய்
வானவ ரெவரும் வந்து வாழ்விக்க
தாகை மகிழரிச் சந்திர நாடகத்தை
அதிசெயச் சரித்திர மாதலில் வீரைப்
பதியில்வாழ் லிங்கப் பாரதி யுரைத்தேன்
இன்சொல் முத்தமிழோ ரெவருமென் தமிழை
புன்சொல் லென்றாலும் பொறுப்பது கடனே. 4

தேவகந் திருவர் பாட
திலோற்றமை யரம்பை யாட
மாமறை முனிவர் சூழ
மதியவெண் குடைமே லோங்க
காவலரேவல் செய்யக்
கற்பக நறுந்தேன் சிந்த
மேவருஞ் சதம கன்தே
வேந்திரன் தோன்றி னானே. 5.

தரு

மின்னுமணி வாகு புரிமேல் வளையிலங்க
மேனகை திலேத்தமையும் வெண்கவரி வீச

சென்னிமணி மாமகுட மின்மினென விளங்கத்
தேவேந்திரன் வந்து கொலுவிருந் தானே. 6

விருத்தம்

முடிசடை புனைந்து மேனி
முழுதும்வெண் ணீறு பூசி
கடிமலர் செங்கை மீதிற்
கமண்டல மொன்று தாங்கி
அடிமுதல் முடியீ றாகி
அருந்தவ மனைத்துந் தானோர்
வடிவுகொண் டதுபோல் வேத
வசிட்டருந் தோன்றி னானே. 7

தரு

இலகிய மணிமுடி ரவியொளிவிட
வருமிந்திர னொடுமிமயவர் தொழவே
மலரய னிவனென மறைமுறையிடு
மாதவ வசிட்டருந் தோன்றினானே. 8

விருத்தம்

மரவுரி மருங்கிற் சாற்றி
வளர்சடை தாழ விட்டு
திரபுர தகன் போலச்
சினத்தெதிர் விழித்து
கரகமண் டலமுந் தாங்கி
கடவுளுக் கரசன் முன்னே
விரத மாதவத்தோன்
விசுவாமித்திரன் தோன்றி னானே. 9

தரு

ஒருகையிற் கமண்டலமுந் தாங்கி
ஒருகையிற் புலித்தோ லோடே

வருகையிற் திசைகிடு கிடென
வளர்ந்த செஞ்சடை தாழவே
புருவநெறித்துப் பார்த்த பார்வை
புகையொடும் பொறி பறக்கவே
வெருவி யெவரும் நடுநடுங்கவே
விசுமாமித்திரன் தோன்றி னானே. 10

விருத்தம்

ஐவரை யகத்தி னுள்ளே
அடக்குமா தவரே உள்ளங்
கைவரு நெல்லி போலக்
கண்டநீ ரன்றோ மாதும்
மைவருங் கடல்சூழ் பாரில்
வானிலந் தரத்தி லென்றும்
பொய்வச னஞ்சொல் லாத
புரவல ரெவர்சொல் வீரே. 11

உண்டவ னொருவன் சொல்வே
னும்பர் நாயகனே கேளாய்
அண்டினர் தம்மைக் காப்போன்
அயோத்தியா புரியில் வேந்தன்
எண்டரு மெனது சீஷ
னியலரிச் சந்திர னென்போன்
தெண்டிரைக் கடல்சூழ் பாரில்
செப்பிய மொழிதப் பானே. 12

தந்தையே புலைய னாவான்
வருமவன் மகனை நீ
இந்திரன் சபையிற் பொய்யா
னென்றுரை செய்ய லாமோ
சந்ததங் கவடும் பொய்யும்
தானொரு வடிவ மாகும்
நிந்தனைக் குரியா னந்த
நெடுநில மன்னர் தானே. 13

கடலெலாம் வற்றி னாலுங்
        கதிமதி தோகா னாலும்
புடவிக தம்பிதஞ் செய்தாலும்
        பொன்னின் மால்வரைச் சாய்ந்தாலும்
விடமெனு முனைப்போல் கோடி
        மென்முனி சோதித் தாலும்
கொடையரிச் சந்திரன் வாக்குக்
        கூறாது பொய்கண் டாயே. 14

மாதவம் புரியுஞ் சோதி
        வசிட்ட மாமுனி யேயிங்
கோதிய மொழியா லுன்னை
        யும்பரும் நகைசெய் யாரே.
ஆதவன் குலத்து வேந்தன்
        அரிச்சந்திரன் தன்னைச்
சாதனைப் பொய்சொல் வித்தால்
        சபத முண்டோ சொல்வாயே. 15

அரத்தினுங் கொடிய கூர்வேல்
        அரிச்சந்தி ரனவனை யோர்பொய்
உரைத்திடச் செய்தா யாகில்
        உன்முன்னே விசுவாமித்திரர்
கரத்தினான் மதுவோ டேந்திக்
        கமுதை மேலேறிப் பின்னும்
சிரத்தினைக் குடுமி தாங்கி
        தென்றிசைக் கேகு வேனே. 16

மானிலந் தன்னிற் சென்று
        மன்ன ரிச்சந்திரன் றன்னை
நானினி பொய்சொல் லிற்று
        நாசிடைத் தள்ளே னாகில்
வானவர் வேந்தன் வைகும்
        மணிநெடுஞ் சபையில் நீ
றீனமா யுரைத்த வார்த்தை
        எனக்குமது யொக்குந் தானே. 17

கோசிக வசிட்ட னென்னுங்
குறைவிலா தவற்றி ரிங்கேன்
தேசுலாஞ் சபையி லூடே
தேவரெல் லோருங் காணப்
பேசிய சபத வார்த்தை
பெரியவர்க் கடாது நீரிப்
பூசலு முனிவும் விட்டு
பேர்ந்துறை யிடஞ்சொல் விரே 18

தரு

கோட்டமிடு மன்னவரை இட்டபணி செய்வித்து
கோலப் பிரமபுகை கொண்டு கொண்டே
அட்டதிசை யும்புகழ் அரிச்சந்திரன் வாசலில்
கட்டியக் காரனும் தோன்றி னானே. 19

விருத்தம்

பைந்தொடி மாதர் துன்னப்
பார்த்திபர் வணங்கிப் போற்ற
சந்திர மதியும் லோகி
தாட்சதன் சத்திய கீர்த்தி
மந்திரி யவர்கள் சூழ
மதிக்குடை நீழற் கீர்த்தி
அந்தரத் தளவு மோங்க
அரிச்சந்திரன் தோன்றி னானே. 20

தரு

வண்ணமா மயில்சந்திர மதியும் சத்திய கீர்த்தியும்
தன்னி கரிலா லோகி தாட்ச தனுடன்வரச்
சொன்ன சொல்தவ றாத சோதிமா மணிமுடி
மன்னவன் அரிச்சந்திரன் மகாராசன் தோன்றி னானே. 21

சத்திய கீர்த்தி வாராய்
சாகரஞ் சூழ்ந்த வைப்பில்

வித்தையி னறிவின் மிக்க
　　　　வேள்வியிற் கேள்வி காலிற்
பக்தியில் மிகுந்த வேத
　　　　பாகா முனிவர் தம்மை
நித்திய தானஞ் செய்ய
　　　　நீயிங்கு வருவிப் பாயே. 22

நிருபர்கள் கேள்அரிச் சந்திரபதி நரபதி
　　　　நெடுமுனி வரையழை நிதிதரவே
முரசறை யெனுமொலி யிருசெவி நுழையுமுன்
　　　　முனிகவுசிகன் வந்து தோன்றினானே. 23

விருத்தம்

வாசல் காவலரே கேளீர்
　　　　மன்னவன் தன்னைக் காண
நேசமா யிங்கு வந்தோம்
　　　　நிமிடத்தி லோடி அங்கே
ஆசி நம்வரவு சொல்லி
　　　　அழைத்திடச் சொல்லீ ராகில்
நாசமாம் படிக்கு நும்மை
　　　　நாம்சிசற் றிடுகு வோமே. 24

வெற்றிமா தவத்தின் மிக்க
　　　　வேதியன் விசுவா மித்திரன்
கொற்றவ னினது வாசற்
　　　　குறுகிற் றன்வரவு சொல்ல
சற்றிறை (தப்புவேன்) யாகில்
　　　　சபிப்பன் நெனைன்ச் சீறி
சொற்றன னவனை நீயே
　　　　தொழுதெதிர் கொள்ளுவாயே. 25

தரு

விந்தை மலரயனை நிகராம்
　　　　மதிவிரத சீலனைத் துய்ய விசுவாமித்திரனை

வந்த மலரடியி னாளே இனிவலிய
வெதிர்நடந்து வணங்கிச் சொல்லுவேனே.26

விருத்தம்

அருமறை யவனே சரணஞ் சரணம்
அதிசய முடையாய் சரணஞ் சரணம்
குருவினு மினியா சரணஞ் சரணம்
குணமிகு பொருளே சரணஞ் சரணம்
மருவின ரானே சரணஞ் சரணம்
வளர்சடை முடியர் சரணஞ் சரணம். 27

என்பதம் வணங்கி யேற்றும்
இயலரிச் சந்திர வேந்தே
நின்பருங் குணங்கண் டுள்ளம்
நிமிர்ந்தெழு மகிட்சி பெற்றோம்
வன்புவி இடத்தி லுன்போல்
வண்மையும் புகழுந் தேக
மன்பு மாதரவு முள்ளார்
அரசரில் எவர்கண் டாயே. 28

செய்தவத் தால்சென் றாடுந்
தீர்த்தம் வந்தாட முன்வந்
தெய்திய தென்னா மேனா
ளெந்தையை சுவர்க்கத் தேற
கைதரு முனியே அந்தக்
கருணைபோ லெனையுங் காக்க
மெய்தவம் புரியா முன்னம்
வெளிப்பட்ட தென்சொல் வேனே. 29

வந்தனம் வரவு கேளாய்
மன்னனே யாக மொன்று
சிந்தையிற் கருதி வந்தோம்
திரவிய மானே யேறிக்
கந்தனைப் போலு மோராள்
கவண்கலா லெறிந்த தூரம்

தந்திட வல்லா யாகிற்
றானது முடியுந் தானே. 30

பாவியென் றென்னை யெண்ணி
பதுமனின் பாதம் நோக
மேவிய தருமை யல்லால்
மெய்ப்பொ ருளமை யோதான்
காவல்மால் யானை யேறிக்
கவண்கலா லெறிந்த தூரம்
தேவரீர் மதித்துச் சொன்ன
திரவியந் தருகின் றேனே. 31

தந்தனை மதித்த செம்பொன்
றாதிபர்க் கரசே யென்போல்
அந்தண முனிவர்க்கு உன்போல்
யாரிது கொடுக்க வல்லோர்
சிந்தையு மகிழ்ந்தோ மிந்தத்
திரவியம் வேண்டும் போது
வந்துபின் வாங்கிக் கொள்வோம்
மற்றிது வசங்கண் டாயோ. 32

தரு

சிந்தையில் மிகுதுயர் செய்திடக் குறித்தரிச்
சந்திர மன்னவன் றானருமந்திர வியமவன்
வசமாக்கின மினின மதாச்சிரமத்திலே நடப்போமே.33

தளையவிழ் மலங்கள் மார்பன்தான்
அரிச்சந் திரன்முன் போய்
யளவறு திரவியங் கேட்டளித்தது
மவன்பால் வைத்தோம்
கிளைபொருள் வேறெய்தாமல்
கெடுத்தினியவன் தன்னாட்டில்
விளைவெலா மழிக்கத் துட்ட
மிருகங்களைத் திட்டிப் போமே. 34

தரு

நாட்டிற் சென்று விளைவழிக்க
நன்முனி தன்பொருட்டாற்
காட்டிற் பன்றி கரடிபுலி
கலைபல வந்ததுவே. 35

இட்ட பயிரத் தனையுயீடு பட்டது காட்டில்
இனியேது மொருபிழைப் பில்லை யென்றே
கொட்டமிடுந் துட்ட மிருகஞ் செய்த
குறை சொல்லக் கடியான பேர்வந்து
தோன்றினாரே 36

தரு

பாரச் சிலையு மம்பும் வலையும்
பன்றி ஈட்டியும் நாயுமாம்
வீரப் புலிகள் போலக் குமுறி
வேட்டைக் காரருந் தோன்றினாரே. 37

விருத்தம்

மன்னனே பாரா யிந்த
மானைப்போற் பிரிதொன் றுண்டோ
சொன்னமா மேனி வெள்ளி
துலங்கிய புள்ளி காலிற்
கொன்னக மிரத்தின நீலக்
கொழுந்தளி ரிரண்டு கொம்பும்
இன்னதைப் பிடித்து நல்காய்
யான்விளை யாடற் றானே. 38

அந்தமானைச் சீதை சொன்ன
வதுபோல யெண்ணாதே
இந்தமானை மாதே தருவேன்
இந்தாப் பிடித்துப்போ. 39

விருத்தம்

தகைப்படு மணுகுந் தூரத்
தாவியே அகலும் பின்னு
மகப்படும் போலே நிற்கும்
அளவிலாக் கோட்டிக் கொள்ளும்
மிகக்கொடுங் கணையா லிந்த
வெய்யமான் றன்னைச் சென்னீ
ருகப்பட வதைத்தார் கண்ணில்
ஒளிக்கும்விண் ணுலகில் தானே. 40

சந்திர மதியே கேளாய்
தவமுனி யொருவன் றாளா
லந்த த்லைமீது தாக்க
நகரொடு நாடுந் தோற்றுப்
பைந்தொடி நின்னை விற்று
பறையனுக் கடிமை பூண்டும்
வந்துநம் பதியிற் பின்னும்
வாழ வோர்கனாக் கண்டேனே. 41

மன்னர்மன் னவனே அந்த
மாதவ வசிட்டன் பாதம்
சென்னியிற் புனைந்த பேர்க்குத்
தீங்கொன்று வருவ துண்டோ
வன்னமா மாய மானு
மறைந்ததவ் வனத்தை விட்டு
நன்னகர் தன்னில் மீண்டும்
நடப்பதே கருமந் தானே. 42

என்னிள மானே யுன்னை
இத்தனை வருத்தங் கூற
அன்னிய னாரு மிந்த
அரிச்சந்திரன் வருத்தி னானே
தன்னியல் கெடுக்க நானே
சண்டாளக் குளத்திற் பாணக்

கன்னியர் தமையென் மூச்சுக்
        காற்றினால் வரச்செய் வேனே. 43

கொடியிடை துவளக் கொங்கை
        குரும்பை மேலார் மின்ன
அடியிணை நடக்குந் தோறு
        மன்னமோ அலவோ வென்னச்
சுடிகையி னுதலும் பொட்டும்
        தொடுமவர் ணகையுங் கொண்டு
கடியவன் சினத்திற் பாணக்
        கன்னியர் தோன்றி னாரே. 44

தரு

நவம தாதியென நகையிள நிலவெழ
இவரெழ கேவரினும் மினிதெனவே
அவரிளைஞர்கள் அதிசெயமுற கவுசிகனிரு
மிற்ற கன்னியர் வந்தார். 45

விருத்தம்

நாமினிச் சொல்லக் கேளீர்
        நம்முடப் பாணப் பெண்க
ளாமென மெச்சி உம்மை
        அரிச்சந்திரன் மகிழப் பாடி
சேமமா கிதிகொள் ளாமற்
        சேர்ந்திடச் சொல்லு மில்லை
போமென மறுத்தாற் கேளும்
        பூஞ்சக்கிரக் குடையைத் தானே. 46

தரு

அன்னமே அரச்சந்திர னின்னிசை
        வீணை வினவிப்
பொன்னரி மாலிகை தாரானோ
        நம்மையொருக் காலத்

தன்னிரு புயத்தினிற் சேரானோ
துலைவிலாத மாமோகம் நிலைகாணோமய்ய
யொன்ம முலையும் பசலை கூறுதே
மதன் வருத்த கலையுமவனையுஞ் சேர்ந்தே
நீராயு கும்விழி பாராய்
வெண்ணிலவாற் படுதுயர் தீராய்
வாரா யெமையினிச் சேராய்
வடிவா ளரிச்சந்திர..... 47

நெஞ்சக மால்கொடு வோமோ
இனிநீசெயப் பேதகம் நாமோ
வஞ்சகமே செய்ய லாமோ
எங்கள் வாலிபந்தான் வம்போமோ. 48

விருத்தம்

பாடியப் பாணப் பெண்காள்
பாத கேளிக்கை நீங்கள்
ஆடிய சதியும் செங்கை
அபிநயத் தொழிலும் யாழின்
கீடிசை வகையுங் கண்டு
நெஞ்சக மகிழந்தோ னும்பால
கோடியின் மேலுஞ் செம்பொன்
கொடுக்க வாங்கிக் கொள்வீரே. 49

எடுத்துநீ வழங்குஞ் செம்பொன்
எங்களுக் கில்லா தென்று
தொடுத்தவேள் கணையால் நொந்தோம்
துணைப்புயத் தெம்மைச் சேராய்
அடுத்தது மறுக்கில் மாலை
அளித்திடாய் அதுவும் நம்பாற்
கொடுத்தி டாயே பூஞ்சக்கிர
குடையினை வழங்கு வாயே. 50

படித்திடும் பாணப் பெண்காள்
பாடலுக் குகந்து செம்பொன்

கொடுத்திடக் கொள்வ தல்லாற்
குடையிவர் கேட்க லாமோ
போற்றிடு முலையா ரிந்த
புலைச்சியர் தலைப்பூஞ் செண்டால்
அடித்து நம்பால னில்லாமல்
அப்புறந் தள்ளு வீரே. 51

தரு

சொல்லு மிசையும் படித்தோம்
துய்ய பாதம் கடித்தோம்
கல்லையு முருக்கி விட்டோம்
காவ லுனுளங் கரைத்தோம்
மல்லு யிருந்திண் புயந்தான்
மன்ன வனரிச் சந்திரன்
அல்ல லெமைச்செய்த தல்லால்
அடித்தான் காண்மா முனியே. 52

விருத்தம்

மெய்ப்புறப் பாடி பாடி
வேந்தனங் கவனை யெங்கள்
செப்புற முலையிற் சேரச்
செப்பினோ மாலை யென்னும்
ஒப்புறத் தருக வென்றோம்
உயர்குடை தனையும் கேட்டோம்
அப்புறந் தகலத் தள்ளி
அடித்தெமைத் துரத்தி னானே 53

அன்னமே அனையீரும் உம்மை
அவமானஞ் செய்த வேந்தை
நன்னகர் செல்லா முன்னம்
நானரைக் கணத்தி லேபோய்
பன்னக வாயி லீன்ற
பலமணிக் குலைகள் சிந்த
பொன்னனி மகுடந் தன்னைப்
பொடிபட உதைப்பன் தானே. 54

கும்பிடு பள்ளர் பாணக்
கோதையர் தம்மை யடித்தும்
வம்பிடு மலர்ப்பூங் காவில்
வளர்த்து நாணமிக உண்டாக்கும்
வெம்பிய மிருகத்தைக் கொன்றும்
வேறு செய்ததனா லுந்தன்
செம்பொன் மாமகுட ரெத்தினச்
சென்னியி லுதைத்திட் டோமே. 55

கீர்த்தனை

பல்லவி

என்ன பாக்கியஞ் செய்தேன் - தவமுனியே
என்ன பாக்கியஞ் செய்தேன் - முன்னெழுந்தருளி

அநுபல்லவி

உன்னுதான பாதம் சென்னிமீது வைக்க

சரணம் 1

என்ன பாக்கியஞ் செய்தேன்.
இந்தமா முடியில் ரெத்தினக் கல்லுப்பட்டு
நொந்துதோ சரணம் வந்த மாமுனியே (என்ன)

சரணம் 2

பிடித்துப் பாதமலர் பேதையென வருடி
அடித்துப் பால்புகட்டி அடியேன்தனை ரெட்சிக்க (என்ன)

சரணம் 3

தன்ம மலரடியன் கன்மவினை துடைத்துச்
சென்ம சபலமாக்கி நன்மை பலவுஞ் செய்ய (என்ன) 56

விருத்தம்

மன்னனே பயமில் லாமல்
வந்துநம் வனத்தி லுள்ள
பொன்னியல் மானை யெய்தும்
பூவையர் தம்மைக் கோவித்தும்
பின்னையு மனந்தங் கோடி
பிழைசெய்தால் பொறுப்போம் பாணக்
கன்னியர் தம்மை யின்று
கடிமணஞ் செய்யிற் றானே. 57

பொன்னிய லயோத்தி செல்வம்
பூஷணம் நகரி நாடுக்
கின்னரி பண்டா ரங்கள்
கேட்கினுந் தருவ தல்லால்
நன்னிக ரில்லா யீன
சாதியிற் பிறந்த பாணக்
கன்னி யாவரை அய்யா
கடிமணஞ் செய்து டேனே. 58

இந்திரா திபரும் சாட்சி
இருடிக ளெவருஞ் சாட்சி
அந்தமில் சந்திரா தித்தர்
ஆகாசம் பூமி சாட்சி
முந்த வே இவன் படைத்த
முதலெலாம் நமக்கிப் போது
தந்தன னென்று சொன்னான்
சகலரும் சாட்சி தானே. 59

இப்பொழுது துரைத்த வார்த்தைக்கு
இனி தப்பு வருவதுண்டோ
அப்பொழு தேகைக் கொண்டோம்
யானைமேல்க் கவண்கல் வீசும்
மெய்ப் பொரு ளுள்ள தெல்லாம்
வேறொரு தேசத் தேபோய்
முப்பது நாளிற் சொன்ன
மொழிப்படிக் கனுப்பு வாயே. 60

கீர்த்தனை
பல்லவி

தவணைக்கு என்ன செய்குவேன்
தவமுனியை எப்போ வெல்வேன்

அனுபல்லவி

எவருடன் துயரஞ் சொல்வேன்
இந்த விதிக்கென்ன செய்வேன் (துவணை)

சரணம்

வேதனை பொறுக்கு நாமோ
வேறொருவரை நோமோ
ஏதென்றறியப் போமோ
இன்னமின்ன மென்பாமோ. (துவணை)

சரணம்

தவமுனிவன் தூதனே
தரகுக்கு வருவானே
அவனுக்குத் தாரம் நானே
அய்யய்யோ வேறொன்று சொல்லேனே.
(துவணை) 61

கோவித் திருக்கண் பொறிபறக்க கொண்டு
கிட்டியு மனனந் தோளு
நாவிற் கட்டின வசனம் பிறக்க
நட்சத்திர னகன்வந்து தோன்றினானே. 62

கோவித் தென்னை யிந்தக்
கொட்டில் மரிக்குமோ விதியே.
எனைக்கொன் றுயிர்தின் றாலும்
இன்னொரு காசுண்டோ விதியே
அந்தப் பாவி தெய்வம்
இந்தப்பாடு படுத்துமோ விதியே
இந்தப் பாரிற்கடன் சிலர்பயந்
தாரு மில்லையே விதியே
கல்லெ டுத்துக் கட்டி
கைதனில் கட்டுமோ விதியே
இந்தக் கண்டிதம் பாவியைக்
காலனுஞ் செய்வானோ விதியே
என்போ லானாலும் இப்படியாரும்
பட்டா ருண்டோ விதியே
தெண்டித் தடித்துச் சினத்தென்னைப்
பார்க்குமோ விதியே
நான்தீராக் கடன்பட்டுச் சிங்கிக்

குள்ளா வேனோ விதியே
கண்டித் தேவரைக் கலக்கஞ்
செய்தேனோ விதியே
இந்தக் காட்டில் வந்தே
யந்தக்கனம் பலித்துதோ விதியே 63

விருத்தம்

அடவி யிலேவருஞ் செல்லா
அத்து வானத்தி லிங்கே
நடுநடுங் காமல் வந்த
நான வனெல் லாவெனப்
படுபசி தீர.
பலதுண்ட மாகப் பிச்சுக்
குடலையும் பிடுங்கித் தின்று
குருதியும் பருகு வேனே. 64

ஆடல் முன்னூல் மார்பா
அஞ்சல்நீ யஞ்சல் தோற்றேன்
வீடுகா னிழந்த தல்லால்
வீர முமிழந்தே னோநான்
காடுறு வேதா ளத்தைக்
கணமொன்றி லென்கை வாளால்
ஈடுறத் துரத்தி கூற்றுக்
கிரையாகி விடுகின் றேனே. 65

பாவியே னுன்பின் செல்ல
பயித்தியங் கொண்டே னோதான்
கூவிய வேதா ளத்தை
கொன்றநீ யெனையுங் கொல்வாய்
தாவினி முனிவன் பின்னை
தராவிடி லொருபொய் யில்லைப்
போவெனச் சொல்லு அப்பால்
போகாமல் நின்று தானே. 66

தரு

இந்தக் காட்டிற் சோறு
எங்கேவரும் விசுவ நாதா.
நானில்லை யென்னும் வார்த்தை
இன்றறிந்தேன் விசுவ நாதா
இததுயரம் படயா னிலக்கோ
விசுவ நாதா.
தனம்மௌ ளளலம் செய்த
தில்லையோ விசுவ நாதா
சத்தி யம்பொல் லாத
சத்துருவோ விசுவ நாதா.
அன்னந்தாள் பூட்டி லிங்கே.
தனம்வருமோ விசுவ நாதா
வேதா நான்விதித் தவிதி
இதுவோ விசுவ நாதா.
அவ்விதியை எவராலும் வெல்லப்
போமோ விசுவ நாதா.
ஏதாகுமோ இன்ன மின்னம்
பின்னே விசுவ நாதா.
துயரெல் லாம்பட வோயெனை
விதித்தாய் விசுவ நாதா
இனியதை யாருக்கு எடுத்து
உரைப்பேன் விசுவ நாதா
பாரிலென் போலொ ருவர்எவர்
பட்டபேர் விசுவ நாதா
கதையிலு மிந்தக் கலி
யறியேன் விசுவநாதா
போனகடன் தருவா ரிந்தக்
காட்டிலுண்டோ விசுவ நாதா. 67

விருத்தம்

சந்திர மதியே பாராய்
தனிவழி தன்னிற் செந்தி
வந்தெதிர் மறித்தற் கோமா
றொருவ கையுங் காணோம்

இந்த நட்செத்திரகன் பாலி
டருறா வண்ணம் நானிச்
செந்தழல் தன்னில் வீழ்ந்தேன்
சீவனை யகற்று வேனே. 68

மன்னர் மன்னவனே யிந்த
மாமுனி தனது செம்பொன்
தன்னையர் கொடுப்பார் பாரில்
தான ரெணபா தர்க்குப்
பின்னையுங் கதிவே றுண்டோ
பெருந்தழ லாகு மிந்த
நன்னதி விலகும் வண்ணம்
நான்தொழு தகத்து வேனே 69

தரு

சத்திய வாசக மென்னுந்
தளையினி கட்டும் பட்டோம்
அத்து வான வனந்தன்னி
லாறுதலை யன்றி வந்தோம்
பத்தினியும் நானே யானால்
பதியேயென் தெய்வ மானால்
சுத்த முனக்கே உண்டானால்
தூரசெந் தழலே போகாய்.
மாமுனிக் கே கடன் பட்டு
மன்னனும் மகனும் யானும்
சேம நிதியும் நகரும்
திருநாடுஞ் சேரத் தோற்றுப்
போமொரு திசையில் நீயும்
பொங்கி வழிமறிப் பாயோ.
தூமமெழுஞ் செந்திச் செல்வாந்
தொழுதேன் உன்வில காய
மன்ன வனரிச் சந்திரன்
வாய்மொழி தப்பா தானால்
சங்கரனே தெய்வ மானால்

கன்னெடும் கானம் நடந்து
காசிமா நகரிற் செல்ல
வன்னியே உன்னைத் தொழுதேன்
வழிவிட் டகலப் போகாய். 70

விருத்தம்

வேதாளத் தாலு மிந்த
வெங்கன லாற்றி னாலும்
போதாதோ பட்ட பாடு
புரவ லரிலா போனார்
சீவ னேதாலும் வருமோ
உன்னால் துயர்படவோ வந்தேன்
நீதரபொன் னில்லை யென்றால்
நின்றொரு பொய்சொல் லாயே. 71

என்னாலாவதிங்கே யேது – வழியெரியக்
கடுகடுக்க யிலக்கோயிப் போது – என்மீது
மின்னாதிடித்துப் பொல்லாது – செய்யவேண்டாம்
வேதியனே வீணே இப்போது.
காசிப் பட்டணத்தைக் கண்டு – செம்பொன்
காட்டுவே னில்லாது கால்க்காசுந் துண்டும்)
மோசப்பட மறித்துக் கொண்டு – யெனைமுனியக்
கணக்கோ முனைமுறிப்பது மீண்டு (என்னா)
நடுங்கேல் பேசி மிகத்தானே – எம
கண்டிதங் கடப்பேனோ யானே
நடுங்கப் பார்க்கில் என்செய் வேனே – இது
நியாயமல்ல கண்டாய் ரக்ஷகனே – (என்னா)
நானே தருவேன் செம்பொன் பாரம் – காசி
நகர மின்னமொரு நாழிகை தூரம்
ஏனெய்யா அவதி கோரம் – செய்து
எதுலாபம் வேண்டாமிந்த நெட்டுரம்
(என்னா) 72

விருத்தம்

காசிப் பட்டணத்தில் வந்துங்
கவுசிகற் குரைத்த பொன்னில்
வீசத் துக்கா சென்றாலும்
வேந்தனீ தந்த துண்டோ
பேசுபொய் யில்லை யென்றால்
பெண்டுடன் பிள்ளை விற்றேன்
தேசிகற் குள்ள பொன்னைச்
செலுத்தி யப்பால் செல்வாயே. 73

விருத்தம்

மாமதி தயனன் பெற்ற
வஞ்சியை வனசப் பொன்னை
காம தீபத்தை தெய்வக்
கற்பினுக் கரசி தன்னை
தாமதி யாமல் வித்துக்
தருகவென சொல்ல லாமோ
நாம னூல் மறையோ யென்னை
நான்விற்றுக் கடன்தீர் வேனே 74

தாரணியிற் சத்தியத்தை நிலைநிறுத்தித் தவமுனிக்கு
நாடீந்துந் தருமம் நோக்கிப்
பாரணியந் தனிற்புகுந வேந்தே எனையாற்
கேனும்விலைப் படுத்தி அந்தப் பொன்னை
சீரணியுங் கவுசிக மாமுனிவர்க் கீய்ந்து
தீர்கடன் வெளிப்பட்டால் சிறப்புமுண்டாம்
வாரணியுங் கொங்கை மின்னார் வேண்டாம்
பேரைமணஞ் செயலுமாமதுவே
வழக்குத்தானே. 75

தரு

விலை கூறினேன் கொள்ளவாரீர் - எங்கும்
மலர்சோலை சூழ்காசிமா நகருளோரே (விலை)
அனவரத மெனையேவி யகலாமல் இருந்தாலும்
வனசமலர் பிரியாதப் பொன்னை வானிற்

கனமுகிலின் மறையாத மின்னை பாவி
தனதுயிருக் குயிரான சந்திமதி தன்னை (விலை)
அஞ்சு வயதினிலே யென்னங்
கைதனிற் செங்கை தந்த.
பஞ்சு வர்ணக் கிளியை
நவ நிதியை அழகிற்
செஞ்சிலை மன்மத ராசாத்தியைப் பார்க்குந்
தஞ்ச மெனுமதி தயனர்க்கு சந்திர மதியை (விலை)
நவ நிதியுந் திருநாடும்
நகர முன்னிழந் ததன்றி.
குவலைய மெல்லாம் மதிக்கும் நானே
முன்பின் னெவர்களும் படாத்துயர் பட்டேனே.
மின்னும் கவுசிக மகாமுனிவன்
கடனுக்காய்த்தானே. (விலை) 76

தரு

நெடுந்தெருத் தனிற் சந்திர மதியை
நிருபன் தான்விலை கூறவே
கடுஞ்சினத் தொடுநடந்து கால
கவுசிகன் வந்துதோன்றி னானே.
தனது வீட்டு வேலைக் கேவல்
தாசிதா னொன்று வேண்டியே
கனகஞ் சொரிந்து கொள்ளக்
கவுசிகன் வந்துதோன்றி னானே. 77

விருத்தம்

பெண்டிரை கடனுக் காகப்
பேதையா ரெனினும் விற்கக்
கண்டது முண்டோ உன்னை
கலிவந்து சூழ்ந்து தோதான்
தண்டனைக் குள்ள வானென
தாவிதி கைக்கொன் றில்லார்
விண்டன போடா வென்றால்
வெட்டியார் கழுவைப் பாரே. 78

பத்தினி தன்னைக் கொள்ள
பணமுமக் இல்லை யென்றால்
திசைதனில் நீர்வந் திப்படிச்
சொல்ல லாமோ.
சந்தியந் தப்பு வேனோ
சதுமறை யவரே யும்மை
புத்த கேட்பவருக் கிந்த
போதனைப் போதிப் பீரே. 79

ஆசிலாத் திருவைப் போலும்
அரிவையை நீவிற் றாலும்
பூசணிக் காய்போல் முத்தப்
புணையு மூக்குத்திக் காமோ
தாசியால் நன்கொடை யாலுந்
தானிவள் வேலைக் காமோ
ஏதுவார் கண்ட பேரும்
எனக்கிவள் தொழிலுக் காகாதே 80

முடிமலர் தொடுப்பவள் ஏவல்
மொழிந்ததுங் கேட்டுச் செய்வள்
அடிபிடித் துமது தேவி
கடப்பமுங் கட்டி நிற்பள்
இடியிடித் ததுபோ லய்யா
இவரெனைச் சினற்றி டாமல்
கொடியிடை இவளைக் கொண்டேன்
கொடுங்கடன் தீர்த்தி டாமோ. 81

ஏற்கு மோரந மக்கதோர்
எழுபது கூடை சாணி
ஊர்க்குளே பொறுக்கித் தட்டி
ஊழிய முழுதுஞ் செய்து
நீர்க்குடம் நூறெ டுத்து
நெற்பதி கலமுங் குற்ற
தார்குழல் சம்ம தித்தாள்
தனமிவர்க் கருளு வோமே. 82

செய்யவு மல்லா ளய்யா
தேவரீர் தானு மிந்த
கைமதக் களிற்றி னேறி
கவணெறி யுயரஞ் செம்பொன்
மையறு முனிவர்க் கீய்ந்து
வரைந்து சாதனமும் வாங்கி
அய்யநுண் ணிடையாளைக் கொண்டு
அகத்தினிற் செல்லு வீரே. 83

அன்னையை யல்லால் வித்தகர்
அல்லவே யெனையு மய்யா.
வின்னெடு முனிவன் பின்போ
யான்றொழிற் செயவல் லேனோ
பின்னையு முன்னை விட்டுப்
பிரியவு முன்னை விட்டுப்
கன்னியிற் குடுமி பற்றி
சினற்றிவ ணிழுக்கின் றானே 84

பெண்டுநான் விற்ற தல்லால்
பிள்ளைதன் னையும்விற் றேனோ
சண்டையோ மடிமாங் காயோ
சாதிக்கத் தோடு வழக்கோ
மண்டுமென் மனைவி யோடும்
மகனை யும்பிடித் திழுக்க
கண்டது முண்டோ விந்தக்
காசிமா நகரி தானே. 85

பசுவினைக் கொன்றா கன்று
பாலுடன் கொன்ற தன்றோ
அசதியோ அனந்தல் தானே
அறமதி மயங்கி னாயோ.
கசகினால் விடுவே னோநான்
கணக்கழி வான வார்த்தை
பிசகிநீ உரைக்க லாமோ
பிள்ளையு மென்ன தாமே. 86

தரு

ஏது செய்வே னென்னுடைய பதியே - பேதையேன்
உனைப்பிரியப் பிதற்றுமென் விதியே. (ஏது)
யாத மலர்தானும் வருடாதே - பெற்ற
பாலகனும் நானு முமைப்பா ...யும் பெறாதே.
வேதியன் வந்தடிமைக் கொள்ளத் தீதே - செய்துமெய்
வார்த்தை நமையிப்படி விலக்கி விட்டபோதே (ஏது)
ஊரறிய தீவினை செய்தேனோ உனது
கொடுங்கையை விட்டிது வரையும்
கொங்கைப் பிரிந்தேனோ.
தேறி மணந்தரித் திருக்கும் நானோ வந்துன்
திருமுகத்தை வந்து தெரிசனஞ் செய்வேனோ
(-ஏது)
புன்மையே செய்தாலும் துதியே - செய்து
பொறுத்த உனக்கேன் செய்பிழை
பொறுப்ப தின்னம் விதியே.
தன்மமே செயமென்று மதியே - நல்ல
சத்திய பாஷாயறியச் சந்திர பூபதியே (ஏது)
சேரும் நிதிநாடு நகர்க்கடலாம் - நமது
செல்வமிழந்தா லென்ன தேரி தாமும் படலாம்
ஆருயிரை விடுத்தாலும் விடலாம் - முனையென்
அய்யனே மனதுதரித்தார்க்குக் பிரிந்
திடலாம். ஏது 87

விருத்தம்

நன்மைமா முனிக்குச் செய்து
நாவிரண் டுரையா நீதிக்
கன்மமாய் முடித்து நம்மைக்
கடுந்துயர் விளைப்ப தென்றால்
திண்மையாம் விதியை யாரே
தீர்ப்பவர் பாவந் தோற்கும்
தன்மமே செயிக்கு மாதே
தளரநீ தகாது தானே. 88

தரு

சந்தனங் கஸ்தூரி சவ்வாது
கூட்டிய நானே - இப்போ
மந்தை யிற்போய் சாணி
வாரி யெடுக்கவு மானேன்
கந்தப் பொடியொடு கற்பூரங்
கூட்டிய நானே - இப்போ
தந்த நெல்குத்தித் தவிடு
புடைக்கவு மானேன் - இப்போ
நெற்குற்ற தற்கொரு
நெட்டு லக்கைப் பற்றினேன்.
பாணி தளிர பனிநீரிறைக்
கின்ற நானே - இப்போ
சாணி தெளித்து தலையிற்
தண்ணீர் சுமந்தேனே கொண்ட
அடப்பம் புடிபிடிக் கச்சில
ரெணங்களை நானே - இப்போ
துடப்பம் பிடித்திங்கு பெருக்கவு மானேன். 89

விருத்தம்

தவமுனி பொருட்டால் வந்த
தரகுவே தியனே சொன்ன
அவதியினைப் படியே ரொக்கமனைத்து
நான்தந் தேனே னன்றோ.
குவைதரு நிதியைக் கொள்ளீர்
கொடிய னென்பின்னே யின்னாள்
உவமையி லவதிப் பட்டீர்
உமக்கு நானென் செய்வேன். 90

தந்த பொன்னிது நான்வந்த
தரகுசம் பளத்துக் காச்சு
வந்தவன் சும்மா வீணே
வழியே போய்விடு வேனோகாண்
அந்த விசுவா மித்தரர்க்

குண்டான பொன்னெல்லா முன்னை
இந்த ஊரினில் விற்றுத் தந்தான்
என்னையிங் கனுப்பு வாயே 91

பொன்னனை யாளை விற்ற
பொருளுஞ் சம்பளத்துக் கென்றாய்
பின்னையா வரையான் விற்றுப்
பெருந்தவன் கடனுக் கீயவென
மின்னை யான்மகன் தன்னொடும்
வித்த லளம லின்னம்
யென்னையான் விலைசொன் னாலும்
எவர்வந்து கொள்வர் தாமே. 92

தரு

எனைக்கொள்ள வருவார்கள் வாரீர்
பண்டை வினைக் கொள்ள
எனை நானே விலைக் கூறினேன் (எனை)
பொய்சொல்ல மாட்டாமல் நானே - ஆண்ட
புவியும் பொருளுந் தோற்றேனே - விற்றேன்
தையலோடு மகனைத் தானே - அந்ததனமும்
இங்கிவன் வந்த தரகுக் கென்றானே, (எனை.)
உந்தந் செய்வினை யிதுயூரே.
விதிப்படியை வெல்லுமவர் பாரிநிலோரே.
எந்தெந்த சாதிக்கும் நீரே யீனரென்றாலும்
செம்பொன் வைத்திருக் கின்றபேரை (எனை.)
மறந்தாலும் உமைவிட்டுச் செல்லேன்
மனவஞ்சகஞ் செய்வார் போலல்லேன்
ஆவியிறந்தாலும் பொய்யொன்று சொல்லேன் - நீரென்ன
தொழிற் சொன்னாலும் யான்செய் வல்லேன்.
(எனை) 93

தரு

தூசு படைத்த மெய்யும்
தூறுதலைக் கொருசும் மாடும்
கூசு நடையுமொரு கோலொடு
கையும் உடலுமாய்

காசி நெடுந் தெருவிற்
கள்ளு வெறித்த மயக்கத்துன்
மீசை முறுக்கிக் கொண்டு
வீரவாகுவும் தோன்றி னானே. 94

விருத்தம்

வீதியிற் தம்மைத் தாமே
விலைகூறி விற்போ மென்றே
ஓதிநீ ரெவரை யாநீ
ரும்மைநீர் விற்க வந்த
சேதியே தூதரனே நூதிரு
நாமந் தானே ஈன
சாதியென் றெனையெண் ணாமல்த்
தான்திரு விளம்பத் தீரே. 95

பறையனா மென்ன யிந்தப்
பார்தனில் விலையே கேட்டான்
குறைவிலாப் பணப்பெ ருக்கோ
கொடுமையாங் காலந் தானோ!
கறைமிடற் றன்னி லேயுள்
கருணையோ கமல பீடத்
திறையவன் வகுத்த வாறோ
இதற்கு நானென் செய்வேன். 96

பறையனே யானா லென்ன
பகர வீர வாகுயென்
இறைவன் நீயே யன்றோ
இக்கடன் தீர்த்தா யாகில்
மறையவர்க் குள்ள செம்பொன்
வழங்கி யிங்கென்னைக் கொண்டாலது
பறைய துகைக்கொண் டுன்னடி
மையாற் றொழிற்செய் வேனே 97

கொடும்புவி யனானடிமைக் கொண்ட
அரிச்சந் திரனேக்ஷுறக் கேளாய்
அடுந்தொழி லாமிடு காட்டை
அகலாமல் காத்திருந்து மதுவேகண்ணாய்
சுடும்பிணத் துக்கோர் முழுமுங்கால்ப்
பணமும்; எமக்குள்ளதைத் தூரவைத்து
இடும்பிணத்தின் வாய்க்கரிசி நீபொசித்துச்
செய்வாயுன் னேவல் தானே. 98

சந்திர மதியே லோக
தாட்சதன் தன்னை யிவ்வூர்
அந்தணர் மக்க ளோடே
அடவியில்ச் சென்று தெர்ப்பைக்
கந்த மூல பழங்கள்
காய்கறி கல்லை யீற்குக்
கொந்தலர் பூவுங் கொய்து
கொண்டு நீவரச் சொல்வாயே. 99

வேதியர் மக்க ளோடும்
வெவ்வனந் தன்னில் செல்லப்
போது மோஜய் யாயிரு
புதல்வனு மும்ம தன்றோ
பேதையென் பால னின்னம்
பிறந்தைந்து பிராய மில்லைக்
காத லாலன் கண்ட
காரியம் நான்சொன் னேனே. 100

கண்ட காரியமோ சொன்னாய்
காரிகை மகனோ டுன்னைக்
கொண்டதும் வேலைக் கன்றோ
கொடுக்கவும் கடந்தானுண்டோ
தெண்டமோ உனக்கு தந்த
செம்பொனும் சிறுவ ரோடு
மண்டிய வனத்தி லேயுன்
மகனையு மனுப்பு வாயே 101

அந்தணர் நம்மைக் கொண்டார்
அவரின்னாங் கோவி யாமல்
விந்தமாங் காட்டிற் சென்று
விறகுடன் தெர்ப்பைக் கொய்து
வந்திடு மறையோர் தங்கள்
மக்களோ டேகி ஐய்யா
சிந்தை யினிடரு றாமற்
திரும்பிநீ வருகு வாயே 102

அய்யயோ புதல்வ ரேநான்
அறுத்ததோர் தெர்ப்பைக் குள்ளே
வெய்யபாம் பிருந்து தீண்ட
மிகமதி மயக்க மானேன்
கையொடு காலு மோய்ந்து
கண்களுஞ் சுழன்ற தப்பா
உய்யு வாறில்லை யென்றாய்க்
கோடிநீ ரிதுசொல் வீரே. 103

சந்திர மதியே லோக
தாட்சதன் எங்க ளோடும்
வந்தவன் விறகு கட்டோர்
மாமரந் தன்னிற் சாற்றி
அந்தமரந் தெர்ப்பைக் கொய்தவன்
தன்னை அரவு தீண்டி
விந்தமாங் கானில் வீழ்ந்தான்
விரைந்தங்கு நீ செல்வாயே. 104

நான்மறை யவர்கள் கோவே
நாணற் புறக்காட்டிற் பாம்பென
தன் மகன் தன்னைத் தீண்ட
சாய்ந்துயி ரிழந்தானென் றேனே
மறையோர்கள் பெற்ற பிள்ளைகள்
வந்து சொன்னார் என்மகன்
தன்பார் போக யிக்கணம்
அனுப்பு வாயே. 105

கொண்டவர்க் கில்லாத் துக்கங்
கோதையே யுனக்கே னிந்த
மிண்டுதான் செல்ல திங்கே
வெகுதனங் கொடுத்தி ழந்தோம்
கண்டு தானவர்நீ யென்றால்
கருமமுள்ள தெல்லாஞ் செய்து
உண்டுநான் துயின்ற பின்னை
ஓடிப்போய் வருகு வாயே. 106

அந்தணர் மைந்தர் முன்சொல்
அடையாளப் படிக்குத் தானே
வந்துமா மரமுங் கண்டேன்
வைத்திடும் விறகுங் கண்டேன்
எந்தன்மா மகனை ஐய்யோ
இவ்விடத் தெங்குங் காணேன்
நைந்துளம் நொந்தேன் பாரில்
நானிதுக் கென்செய் வேனே. 107

கூரிரு ளந்த காரக்
கொடுந்துளி மழைக்கே காட்டில்
ஓரடிப் பாடு மின்றி
உலாவியே வருமென் காலிற்
சேரவே தட்டித் தென்றன்
சிறுவனே யாக வேண்டும்
ஆருயிர் தவிக்கும் பாவி
அங்கஞ் செல்லு வேனே. 108

தரு

என்ன செய்வேன் கண்மணியே
என்னு யிரேலோகி தாசனே
பன்னகந் தான்தீண் டியதோ
பாவி வேதியன் முனிந்து
சொன்ன வார்த் தைக்கஞ்சி யிங்கே
துயில்கொண் டாயோ மகனே
வின்ன பேதகஞ் செய்த

விசுவா மித்திரனார் சோதனையோ
அறந்தானோ நாடுபரி தன்னி
லாணைமா சேனை சூழ
சிறந்தாரும் போற்ற நீரே
செம்பொன் முடிசூ டாதே
மறந்தாயோ வென்ன செய்வேன்
என்மகனே லோகி தாசனே
நஞ்ச முயிருண் டதுவோ
நான ழைத்தால் வாராயோ
அஞ்ச லென்றா லாகாதோ
வாருடன் னென்றுயர் சொல்வேன்
வஞ்சக மோகன விதுவோ
மாயமோ ஐய்யய்யோ மகனே.
என் செய்வேன் நான்கண் மணியே
என்னுயிரே லோகி தாசனே
பாவியென் வயிற்றில் வந்து
பட்டபாடு போது மென்னுங்
கோபமோ உன்விதி வசமோ
கொற்றவன் விற்ற குறையோ
தேவர் முறை யிதுவோ
திருவாய் மலர்த்தி டாயோ
ஆவியே என்கண் மணியே.
ஐயனே லோகி தாசனே
வெடுத்த மகனை மார்பி லேந்தி
இல்லி லந்தணற் இதனை சொல்லி
அடுத்த சுடலை தன்னி லப்புற
மடக்கி யென்னு யிரனை யனே. 109

விருத்தம்

அன்னையாம் பாவி யானேன்
அருமக னுடலைத் தாங்கித்
துன்னிரு மிரவில் வந்தேன்
சுடலையிற் சேவகஞ் செய்ய
மின்னிரு முன்னூல் மார்பா

வீரவாகு வின்றன் கூலி
என்னவா ருள்ள தெல்லாம்
இதனை (ஸ்ரீ செப்பு வாயே) 110

காட்டினில் பிணத்தைத் தானே
கையினி லேந்திக் கொண்டு
வீட்டினிற்கு (வந்து) வீணி
......னிலை யோ, போடி
ஏட்டினிற் கடங்காச் செம்பொன்
னிழந்தி ழுந்தது மல்லாமல்
மீட்டு முண்டோ நான்பட்ட
வில்லங்கம் சொல்லு வாயே. 111

ஆறடி பிணமொன் றேந்தி
அர்த்த ராத்திரியி லிங்கே
கூரிய நெருப்புங் கொண்டு
கொள்ளிவாய் போல வந்தாய்
சூரணம் விர வாகு
சுதந்திரம் கெடாம லுண்டோ
பேரிடு காட்டி லாற்கும்
பிணஞ்சு டும்பணி தானே 112.

நாலிரண் டுரைக்க வஞ்சி
நாடு நகரந் தோற்ற
மாவரிச் சந்திரன் சேயி
மைந்தனுக் கரவு தீண்ட
............வந்தடுத்த வேதுந்
தரவி தியில்லை யென்னைக்
கோவியா திரங்கி ஐய்யா
கொள்ளி வைத்திடச் செய்வாயே. 113

தரவிதி யிலையென் பானேன்
தரிக்குமுன் கழுத்துக் குள்ளே
இரவிபோல் மின்னு தாலி
எத்தனை பொன் பெறாது

விரைவில் விற்றதனைக் காசு
வீரவா குவினுக் குள்ள
திரவினை வழங்கிப் பின்னும்
மகனைத்தீக் கொளுத்து வாயே. 114

அரகரா சிவனே நானி
தாருடன் சொல்வே னைய்யோ
வரவைதன் முன்னே வந்தேன்
மன்னவன் கண்ட தாலி
பரிவிலா ஈன சாதிப்
பறையனோ கண்ணிற் காண்பான்
விரைவிலென் மகன்போல் யானும்
விடுத்துயிர் நீக்கு வேனே. 115

சந்திர மதியே நானே
தானரிச் சந்திரன் கண்டாய்
மைந்தனோ டுன்னை விற்ற
வான்பொருள் தரகுக் கென்றான்
அந்த மாமுனிவன் பொன்னுக்
கடிமையாய் சண்டா ளர்க்கே
எந்தனை யானேன் விற்றி
னிடு காடுகாற் கின்றேன் 116

சினமுனிக் கென்னை விற்றுஞ்
செய்யா வேலைகள்செய் வித்தும்
வனமிசை மகனைப் பாம்பால்
மடிவித்தும் மனநோ யென்
றளனதுயிற் கணவா உன்னைச்
சண்டாளர்க் கடிமை யாக்கி
வினையிடு காடுங் காக்க
விதித்துதே விதியுந் தானே. 117

படுதுய ரல்லாம் மானே
பட்டு நொந்தீர்வ தெல்லால்
விடுவதோ விதியிப் பாலும்
வேதியன் றன்பாற் போய்நீ
இடுகொள்ளிக் காச வாங்கி
ஈய்ந்தல்லால் மகனென் றாலும்
கடலைக் காத்திருக்கு மென்னாற்
சுதந்திரம் விடப்ப பாதே. 118

தரு

மன்னன்முன் மகனை வைத்து
மாமறை யவன ருகி
லின்னமிடு சூலி கேட்க
யிக்கணம் போய்வரு வானே. 119

மைந்தனை தகனஞ் செய்ய
மறையவன் றன்பாற் போய்நாம்
தந்திரங் காசு வாங்கி
தருவ னவ்வளவும் நாம்போய்
வந்து நம் [illegible]கன் பிணத்தை
[illegible] கொடு தின்றி டாமல்
கந்தவே ளனைய கோவே
காப்பு முன்கடன் கண்டாயே. 120

விருத்தம்

அய்யோ மகனே உன்னையங்கே
அரசன் [illegible] பிலடைக் கலமாய்
பொய்யோ [illegible] ந்ததுவும்
பூதே[illegible] கெறிந் ததுவோ
மெய்யோ து[illegible]கின்றேன்
மிடற்றை [illegible] ஓயிர்விடவுங்
கையோ வெழு[illegible]னைப்
பொர[illegible] ணேனே. 121

விருத்தம்

நிற்றவம் புரிந்து விசுவ
நாதர் அருளி னாலே
பெற்ற பாலகனைக் காணா
பெருந்துய ருள்ளத் தோடும்
கொற்ற மன்னியர்கள் சூழ
கோதையர் மருங்கு துன்ன
வெற்றிசேர் செங்கட் காசி
வேந்தனுந் தோன்றி னானே 122

தரு

துன்னு களவிற் றன்னி ளிளமகன்
சோரம் போகவே
என்ன காரண மென்னக் காசி
மன்னன் தோன்றினான்
வளமிகு புகழாளன் காசி
மன்னன் மகனைக் கன்னமிட்ட
களவு கண்டே பிடிக்க
ஊரில்காவற் காரருந் தோன்றினரே. 123

விருத்தம்

பிணந்தின்னிப் பேயி தென்று
பிள்ளையைக் கொன்று தினறோர்
அணங்குபோல் நிற்றல் பாரீர்
அர்த்த ராத்திரியி லிங்கே
நிணங்கொளு மிநதப் பேயை
நிமிடத்திற் பிடித்துக் கட்டி
வணங்கி மன்னவன்பால் விட்டு
மனத்துயர் தீரு வோமே. 124

பஞ்சின்மெல் லடிகள் நோகப்
பனிமுகப் பதுமம் வாட
நஞ்செனுங் கண்ணீர் சோர
நலங்கிமெய் வருந்தி நின்றாய்

கஞ்சாமா மயிலொப் பாயிக்
கடுங்கொலை செய்வா யென்று
நெஞ்சினில் துயரம் விட்டு
நீயெவ ருரைசெய் வாயே. 125

களவுகண் டெனையுங் காவல்
காரர்பின் கட்டாய்க் கட்டி
அளவிலாத் துயர்செய் வித்தும்
அறியாயோ இன்ன மன்னா
உளமதி லிருக்க மன்றி
உள்ள சுவைக்கா சுயர்யுன்
இளமகன் தன்னைக் கொன்றார்
*நான்கண் டாயே. 126

கண்ணாறக் கண்டு காவற்
காரர் வந்துரைத் ததன்றி
பெண்ணிவள் பிள்ளைக் கொன்ற
பேயும்நான் தானே யென்றாள்
எண்ணிநான் செய்வ தென்ன
இவள்தனை யிடுகா டென்றும்
மண்ணில் நின்ற வீரவாகு
வாறா லதைச்செய் வாரே. 127

தரு

வால மதிநுதல் வஞ்சி
வடிவுகொண் டாளிவள்
பால கனைக் கொன்ற
படும்பாவி கண்டீரே.
துய்ய பட்டணத்தி லுள்ளோர்
தூரப்போய் நில்லீரிந்த
வெய்யபாத கிமுகத்தில்
விழியா மலே. 128

விருத்தம்

மேவியற் சுடலை காற்கும்
விறல்வீர வாகு வேஇப்
பூவுல காளும் வேந்தன்
புதல்வனைக் கொன்று தானோர்
பாவைபோல் நின்ற பஞ்சப்
பாதகி இவளை வாளால்
ஆவி போய்த்துடிக்க வெட்டி
ஆக்கினை செய்கு வாயே
இடுகொள்ளிக் காசுக் கிங்கே
யென்னமுன் னனுப்பிக் கொண்டு
நெடுமறை யவன்பாற் சென்று
நின்னதம் மகனைக் கொன்றார்
படுகொலைப் பாவி யென்றும்
பார்த்திபன் என்கை வாளால்
அடுகொலைச் செய்யச் சொன்ன
வடைவெனகோன் சொல்லு வாயே. 129

பிரிந்துசெல் வழியில் மாய்ந்தோர்
பிள்ளையென் மடியில் வீழப்
பொருந்திய விழியா லாவி
போகவுஞ் சம்ம தித்தேன்
வருந்தி நெஞ்சிட ருறாமல்
மன்னாநின் வாளால் மாள
அருந்தவஞ் செய்தேன் என்னை
ஆக்கினை செய்கு வாயே. 130

மானியல் விழியா சந்திர
மதியேநம் விதியி னாலே
நானு னைவதை செயாமுன்
நங்குல தெய்வந் தன்னைத்
தேனலர் கொன்றைச் சூடுஞ்
செஞ்சடைப் பொருளை யுன்னி
மேனிகள் பிறவிக் கேற்க
வேண்டிய வரங்கொள் வாயே. 131

அகவல்

சங்கரா சிவனே சருவலோ கேசா
பொங்கர வணிந்த புரிசடை நிமலா
கங்கை வஞ்சமிலா கைலாச வாசர்
மங்கை யோர்பாகர் மான்மழுத் தரிக்கும்
மத்தனே பரனே அடியவர்க் கருளும்
மத்தனே காசிவரு விசுவ னாதா
மாதையர் பரனின் மலரடி வணங்கும்
பேதையர்க் கருள பெறுவா மேதினில்
ஆளவருஞ் செல்வத் தரசுவீற் றிருக்கும்
வளநகர் போற்றி யென்மானக ராகவும்
பெருகிய கருணைப் பொருள்புரி யவரு
குருவசிட் டமாமுனி யாகவும்
வந்தருள் புரக்கு மாமதி தயனன்
சந்ததி யெனவே தானுற் பவிக்கவும்
சந்திர சூரியர் தான்றற் கேழினும்
மந்தர மேரு மால்வரைச் சாயினுஞ்
சத்தியம் பகர்அரிச் சந்திரபூ பதியேயென்
கைத்தலம் பிடித்த கணவனே யாகவும்
மன்மத னென்ன வடிவுபெற் றிடுமென் .
தன்மகன் லோகி தாக்ஷித னாகவும்
நித்திய நீதி நெறிவளர் மந்திரி
சத்திய கீர்த்தி தானே யாகவும்
பூண்டவம் புரிய பூருவ சென்மத்தில்
மூண்டவெவ் வினையால் முயலகன் றன்னால்
அற்பல சென்ம மயக்கினு மெனக்கல
உற்பல கலவுப் பலந்தொறு முதவிசெய் தருளே. 132.

விருத்தம்

கையிலென் வாளின் வீச்சுக்
        கடிமலர் மாலை போலித்
தையல் தன்கழுத்தில் வீழச்
        சத்தியம் பொய்த்த துண்டோ

வெய்யதீ வினையா லெந்தன்
வீரமும் மவமே போமோ
ஐய்யோ இனியோர் வெட்டால்
ஆருயிர் கொள்ளு வேனே. 133

பொறுபொறு பூரை பூரை
புகழரிச் சந்திர வேந்தன்
சருவ லோகத்து முன்போற்
சத்திய மெவரே சொல்வார்
மறுவிலன் மகற்குங் காசி
மன்னவன் மகற்கு மாவி
பெறுவாம் பெற்றோம் பின்னும்
பெறுவரம்நீ சொல்லு வாயே. 134

சங்கரா போற்றி போற்றி
சருவலோ கேசா போற்றி
மங்கையோர் பாகாப் போற்றி
மதிமுடிச் சடையாய் போற்றி
பொங்கர வணிந்த முக்கட்
புனிதனே போற்றி யேந்துஞ்
செங்கண்மா லுடையாய் போற்றி
சிவசிவா போற்றி போற்றி. 135

ஈசனே சிவனே முக்கண்
ணிறைவனே ஏழைப் பங்கன்
நேசனே அடியேன் வேண்ட
நீதர வரமே தென்னில்
வாசவன் சபையில் மேனாள்
வசிட்டன்முன் வாது பேசிக்
(கோ)சிகன் தனக்கு வந்த
கொடும்பிழை யகற்று வாயோ 136

உன்னையன் முனிவன் செய்யும்
உறுதுயரை யுமெண் ணாமல்
பின்னையு மவனுக் காகப்
பெருமலாங் கேட்டா யன்றோ

மன்னையா ருயிரையி லொப்பார்
நீகேட்ட வரமுந் தந்தோம்
முன்னைமா னகறிற் சென்று
முடிசூடிக் கொள்ளு வாயே. 137

மாமுனிக் கீய்ந்தே னாடும்
மனைவியை மறையோன் கொள்ள
தாமத மன்றி வித்தோன்
சண்டாளரக் கடிமை பூண்டேன்
நாமமும் பிரித்தொன் ருனேன்
நானிடு காடுங் காத்தேன்
சோம சேகரனே யின்னஞ்
சூட்டவோ மகுடந் தானே. 138

இந்திரன் சபையில் சொன்ன
இருடி சோதனையா லுந்தன்
சந்திர மதியைக் கொண்டாய்
தானு மக்கினியே கண்டாய்
வந்துனைக் கொண்டா னீசன்
மறலிநீ காக்க யீமஞ்
செந்தழல் யாக சாலை
திருமுடிச் சூடு வாயே. 139

அடிமறு மன்னர் போற்றும்
அரிசந்திர நாட கத்தை
முடிவுறக் கற்றோர் வாழி
மொழிகதைக் கேட்டோர் வாழி
(மழி) தமிழ்ப் புலவோர் வாழி
மன்ன பாரதியும் வாழி
படிபுகழ் வீரை லிங்கப்
பாரதி வாழி தானே. 140

முந்தையன் துணை, ஹரி ஓம் நன்றாக குரு வாழ்க குருவே துணை. எழுத்து கிருஷ்ணப்பன் பரமேஸ்வரன் துணை யோகனாயகியம்மன் துணை. வேலாயுதன் துணை. விக்கினேஸ்வரன் துணை. ராமபத்திரர் துணை.

....

கதைச் சுருக்கம்

நான்முகன் ஆராய்ந்து படைத்த அண்டங்கள் எல்லாம் ஒப்பாகா வண்ணம் மயன் தன்னுடைய அறிவு நுட்பத்தைக் கொண்டு அமைத்த ஓவிய மண்டபத்தில் தேவர்க்கரசனாகிய இந்திரன் தன் தலைவியாகிய இந்திராணியுடனே வீற்றிருந்தான். கோடி அரம்பைமாதர்கள் பக்கத்தே நின்று அழகிய சாமரங்களை வீசினார்கள். தேவர்களும், அரசர், வித்தியாதரர், தும்புரு, சித்தர், கந்தருவர், ஒற்றர், பூதர், கின்னரர், நாரதர், நாகர், அரக்கர்களும் கூடிப்போற்ற சிறப்புடன் அரியணையில் அமர்ந்திருந்தான்.

பிறகு முனிவர்களைப் பார்த்து இந்நிலவுலகத்தில் தம் நாட்டில் தீவினைகளும், துன்பங்களும் நிகழ்வதற்கு இடம் இல்லாமல் உண்மையுடன் நீதியுடன் அறத்தை வளர்த்து வரும் அரசர்கள் யார் உளர்? அவர்களை எனக்குத் தெரிவிப்பீர்களாக என்று வினவ வசிட்ட முனிவர் தாம் கூறியபடி எல்லா அறநெறிகளும் அமையப் பெற்றவன் அயோத்தி நாட்டை அரசு புரியும் அரிச்சந்திர மன்னன் ஒருவனே ஆவன் என்றார். இச்சொற்களை செவிமடுத்த காசிராசன் புதல்வராகிய கோசிகரென்னும் விசுவாமித்திர முனிவர் தாம் அரசராக இருந்த காலத்தில் கொண்ட பகைமையை மனதில் கொண்டு வசிட்டர் கூறிய மொழிக்கு மறுமொழியாக மிகுந்த கொதிப்புடன் பொல்லாதவனும், தீயவனும், பிறர் மனைவியை விரும்புபவனும் எவருக்கும் பயன்படாதவனும் பொய்ம்மொழி புகல்பவனும், அற்பனும், வஞ்சகனும், கபடனும் ஆன ஓர் அறிவீனனை மிக நல்லவன் என்ற இத்தேவர்கோன் முன்பு சொல்லுகிறாய். இவ்வாறு கூறக் காரணம் என்ன என்று கேட்டார். இதனைக் கேட்ட வசிட்ட முனிவர் உண்மையானாகிய அரிச்சந்திரனைக் குறித்து உம்முடைய சினத்தன்மையினாலே இவ்வாறு அஞ்சாமல் இயம்புகிறீர்? தெய்வமும் உம்முடனே கூடிக்கொண்டு பொய்யாக இருக்கின்றது. இவ்வாறு ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொண்டே இருந்ததைப் பார்த்த இந்திரன் உங்களுடைய சொற்களின் உண்மையை வெளிப்படுத்தும் அளவிற்கு இருவரும் சபதம் செய்து காரியத்தில் முயலுவீர்களாக என்றான்.

இதைக்கேட்ட வசிட்டர் அரிசந்திரனிடத்திலே நான் கூறியதற்கு மாறாக தவறு உண்டென்று விசுவாமித்திரர் காட்டினால் அப்பொழுதே என்னிடத்தில் உள்ள தவத்தையெல்லாம் இழந்து இழிந்த கள்ளை மண்டையோட்டில் வைத்து கரத்தில் வைத்து கழுதைமேல் ஏறி தென்திசைக்குத் தனித்துப் போகக் கடவேன். இஃது உறுதி என்று கூறினார். அதற்கு விசுவாமித்திரர் நான் தோற்றுப் போவேன் ஆனால் நான் செய்யும் தவத்தில் பாதி தவப்பலத்தை அவருக்கு மனமாரக் கொடுத்து விடுகிறேன் என்றார். பிறகு அவ்விருவரும் தத்தம் உறைவிடம் ஏகினார்.

விசவாமித்திரர் தன்னுடைய இருக்கையை அடைந்த பின்னர் தாம் கூறியபடி அரிச்சந்திரனை எவ்வாறாயினும் பொய்யனாக்கி விட வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு அரிச்சந்திரன் அரண்மனையை அணுகி வாயிலில் நின்று வாயிற்காப்போனிடம் அரிச்சந்திரனைக் காண வந்துள்ளதாகத் தெரிவித்தார். உடனே வாயிற்காப்போனும் மன்னனிடம் தெரிவிக்க மன்னனும் உள்ளே வரச் சொல்லி அவருக்குத் தகுந்த இருக்கை அளித்து தாங்கள் எதன் பொருட்டு இவ்வெளியேனிடம் வந்தீர்கள் வந்த காரியத்தை அருள்செய்து தெரிவிக்க வேண்டும் என்று கூறினான்.

விசுவாமித்திரர் மன்னனைப் பார்த்து திங்கள், ஞாயிறு, அசுரர்கள், தேவர்கள், இந்திரன் ஆகியவர்களுள் எவராலும் செய்யமுடியாத ஒரு சிறந்த வேள்வியைச் செய்து முடிக்க நான் எண்ணியுள்ளேன். அதற்கு அளவற்ற பொருள் வேண்டியுள்ளதால் அப்பொருளை யாரிடம் பெறலாம் என்று எண்ணிய பொழுது எனக்கு உன் நினைவுதான் வந்தது. அதன் பொருட்டே நான் உன்னிடம் வந்தேன் என்றார். அரிச்சந்திரனும் அப்படியே ஆகுக எனக் கூறி வேண்டிய பொருள் வழங்க ஏவலர்களுக்கு கட்டளையிட்டான். கட்டளை யிட்டதைக் கண்ட விசுமாமித்திரர் மன்னா தற்பொழுது எனக்கு அப்பொருள் தேவையில்லை. யாகத்தின் பொழுது நானே வந்து கேட்கிறேன். அப்பொழுது அதைக் கொடுத்தால் போதும் என்றார். அரசனும் சரி என்று ஒப்புக் கொண்டான்.

துர்புத்தி கொண்ட விசுவாமித்திரர், அரிச்சந்திரனுடைய நாடு நகரங்களை அழிக்கத் திட்டமிட்டு காட்டு மிருகங்களையும் பலவகை விலங்குகளையும், பறவைகளையும் ஏவிவிட்டு நாட்டு வளங்களை அழித்து குடிகளையும் பல துன்பங்களுக்கு உட்படுத்தினார். மக்கள் அரசனிடம் முறையிட்டு குறைகளை தீர்த்துக் கொண்டார்கள்.

கிளிமொழியாளாகிய சந்திரமதியோடு பஞ்சு மெத்தை அமைத்த கட்டிலின் மேல் உறங்கிக் கொண்டிருந்த அரிச்சந்திரன் தீய கனவு ஒன்றைக் கண்டு விழித்து எழுந்தான்.

திடுக்கிட்டு எழுந்த அரிச்சந்திரனைக் கண்ட சந்திரமதி அக்கனவு என்ன என்று கூறுமாறு வேண்டிக் கொண்டாள். அரிச்சந்திரன் அக் கனவினைக் கூறலானான். கரும்பு போலும் இனிய சொல்லை உடையவளே தவமுனிவன் ஒருவனுடைய வஞ்சனையால் என்னுடைய நாடு, நகரம் எல்லாம் தோற்று, பைந்ததொடியான நின்னை விற்று பறையனுக்கும் அடிமை செய்து வந்து நம் பதியிற் பின்னும் வாழுமாறு கனவு கண்டேன் என்றான். உடனே சந்திரமதி மன்னவனே நம் குருவாகிய வசிட்ட முனிவன் பாதத்தை வணங்கும் நமக்குத் தீங்கொன்றும் வராது என ஆறுதல் கூறி தேற்றினாள்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனை வஞ்சனையால் வெல்ல சில சூழ்வினைகளைக் கையாளுகின்றார். தன்னுடைய மூச்சுக் காற்றில் இருந்து இரண்டு மோகினி போன்ற பெண்களைத் தோற்றுவித்து அவர்களைப் பார்த்து இப்பொழுதே நீங்கள் அரிச்சந்திரனித்தில் போய் இனிமையான இசைப்பாடலைப் பாடி அவனை மயக்கி அவனுடைய பூச்சக்கிரக் குடையை (வெற்றிக்குடையை) நன்கொடையாகக் கேட்டு வாங்கிக் கொண்டு வாருங்கள். அது கைகூடாமற் போனால் அவனோடு உறவு கொண்டு அவனைக் கணவனாக்கிக் கொள்ளுங்கள். இரண்டில் ஒரு காரியத்தைக் கட்டாயஞ் செய்து நிறைவேற்றுவீர்களாக என்று கட்டளையிட்டு அனுப்பினார். அவர்களும் அவ்வாறே அரிச்சந்திரனை மயக்கி பூச்சக்கிரக் குடையைக் கேட்டவுடன் கதிரவ குலத்து மன்னர்களால் தலைமுறைதலைமறையாகப் பிடிக்கப்பட்டு

வந்து இப்பொழுது என்னிடஞ் சேர்ந்திருக்கிறான். வெற்றிக் குடையை நீங்கள் கேட்பது தக்கதன்று. இது அரச சின்னங்களைச் சேர்ந்தது. இஃதில்லாவிட்டால் என்னுடைய அரசாட்சிக்குச் சிறப்பில்லாமற் போய்விடும். இதனைக் கொண்டுபோய் நீங்கள் யாது செய்வீர்கள்? உங்கட்குப் பயன்படாத இக் குடையைக் கேட்க வேண்டாம். இங்கிருக்கும் பொருட்களில் வேறு எதையேனும் கேளுங்கள் தடையின்றித் தருகிறேன் என்று சொல்லினான். அப்பெண்கள் பிறகு அரிச்சந்திரனைப் பார்த்து அவ்வாறு செய்ய உமக்கு விருப்பம் இல்லாவிட்டால் எங்களை மணமாவது செய்து கொண்டு கணவனாக வேண்டும் என்று கூறினார்கள். அரிச்சந்திரன் சம்மதிக்காமல் போகவே அப்பெண்கள் மீண்டும் முனிவரிடம் வந்து நீர் கேட்கச் சொன்ன அவ்வாறே கேட்டோம். அவன் எங்களை அவமானப்படுத்தி, அடித்து விரட்டி விட்டான் எனறார்கள்.

மாதர்கள் அவ்வாறு கூறவே விசுவாமித்திர முனிவர் மிகுந்த சினம் கொண்டு அரிச்சந்திரன் சபையை அடைந்தார். அவர் வருகையைக் கண்ட அரிச்சந்திரன் விரைவாக எழுந்து போய் எதிர்கொண்டு நடந்து அவருடைய திருவடிகளை வணங்கிக் கொண்டு கிடந்தான். அவ்வாறு கிடக்கும் அளவில் விசவாமித்திரர், அரிச்சந்திரன் தலையின் மேல் அணிந்திருந்த திருவடியின் மணிக் கூட்டங்கள் பலதிக்குகளில் தெரித்து விழவும் மார்பின் மேல் அணிந்திருக்கின்ற அணிகலன்கள் தெரித்து விழவும் தம்முடைய காலால் உதைத்தார். அப்பொழுதும் அரிச்சந்திரன் சினம் கொள்ளாமல் முனிவரே உம்முடைய திருவடிகள் என்தலைமீது விழ நான் என்ன பாக்கியஞ் செய்தேன். என்மீது தாங்களுக்கு சினம் உண்டாகக் காரணம் யாது? அதனை மொழிந்தருள்வீராக என்று சொல்லி வேண்டிக் கொண்டான்.

இவ்வாறு அரிச்சந்திரன் இயம்பவே விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பார்த்து என்னுடைய பெண்களான அந்த இரண்டு பேரையும் நீ திருமணஞ் செய்து கொள்வாயானால் விலங்குளைக் கொன்றதையும், பன்றியை அம்பால் எய்து துரத்தியதையும், இசைப்பாடலைக் கேட்டுவிட்டு யாதுங் கொடாமல், விரட்டியடித்ததைப்

பொறுத்துக் கொள்வேன் என்று கூறினார். உடனே அரிச்சந்திரன் முனிவரைப் பார்த்து என்னுடைய கண்ணைக் கேட்டாலுங் கொடுக்கின்றேன். நான் ஆளுகின்ற உலகத்தை விரும்பினாலும் என்னுடைய செல்வத்துடனேயே கொடுக்கிறேன். ஆனால் இசையை விரும்பிய செம்மையான சொற்களை உடைய பறைக்குலப் பெண்களை நான் விரும்பமாட்டேன் என்று கூறினான்.

இங்ஙனம் கூறக்கேட்ட முனிவர் இந்திரர், இருடிகள், சூரிய சந்திரர், ஆகாசம், பூமி மற்ற எல்லாம் சாட்சியாக நிற்க, நீ தருவதாக சொன்னவை யெல்லாம் எனக்குத் தாரைவார்த்துத் தருவாயாக என்ற கூறினார். அரிச்சந்திரனும் சரி என்று ஒப்புக் கொண்டு தாரைவார்த்து அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு, விசுவாமித்திரரிடம் விடைப்பெற்றுக் கொண்டு, மனைவி, மகனுடன் அரண்மனையை விட்டு வெளியேறினான்.

அங்ஙனம் செல்லும் பொழுது, முனிவர் மன்னனைப் பார்த்து, எனக்கு யாகத்தின் பொருட்டு தரவேண்டிய பொருட்களையும் இப்பொழுதே கொடுத்துவிட்டுப்போ எனக் கேட்க, மன்னன் எப்படி என்னால் தர இயலும் என்ற கேட்டான். அதற்கு விசுவாமித்தரர் மன்னா யானை மேல் நின்று கல்வீசினால் அது எவ்விடத்தில் சென்று விழுமோ அந்த தூர அளவிற்கு உள்ள பொருளை, நீ வேறொரு தேசம் போய் சம்பாதித்து, எனக்கு முப்பது நாளில் சொன்ன மொழி தவறாமல் அளித்தல் வேண்டும் என்று கூறினார். அப்பொருளை வாங்கிவர சுக்கிரன் என்ற ஒரு வேலையாளையும் அனுப்பிவைத்தார்.

அரிச்சந்திரன் மனைவி, மகன், சுக்கிரன், தன் அமைச்சனான சத்தியகீர்த்தியோடும் நாட்டை விட்டு வெளியேறி, வேற்று நாட்டிற்குப் புறப்பட்டான். அங்ஙனம் புறப்படும் பொழுது, விசுவாமித்திரர் சூழ்ச்சியாலும் வஞ்சனையாலும் பல துன்பங்களுக்கு ஆளாகி முடிவில் அரிச்சந்திரன் காசி என்னும் பதியை அடைந்தான்.

அந்நாட்டை அடைந்து ஒரு இரவு தங்கி மறுநாள் பொழுது விடிந்தவுடன் மிக்கக் கொடுமை செய்ய நினைத்த சுக்கிரன்

அரிச்சந்திரனைப் பார்த்து, நீ விசுவாமித்திரருக்குக் கொடுப்பதாகக் கூறிய பொருளைக் கொடுப்பதானால் இப்பொழுதே அதனை கொடுத்து விடுவாயாக என்று சொல்லிக் கேட்டான். அரிச்சந்திரன் நாம் கொடுக்க வேண்டிய பொருளைக் கொடுப்பது எவ்வாறு என்று எண்ணமிட்டான். கலையுடன் கண்ணீர் சொரிந்தான். கற்புக் காரிகையான சந்திரமதி தன் கணவனைப் பார்த்து நாம் முனிவர்க்குச் சொன்ன தவணைநாள் முடிவதற்கு முன்பாக என்னையும், மகனையும் நீர் விலை செய்து கடனைத் தீர்த்து விடும் என்று கூறினாள்.

சந்திரமதி இவ்வாறு கூறவே இனிமேற் செய்யத் தக்கது இதுவேயாம் என்று அரிச்சந்திரன் துணிந்து, கண்களிலிருந்து வெள்ளமாகப் புறப்பட்ட நீரை அடக்கிக் கொண்டு காசிமாநகரத் தெருவிலே விலை கூறிக் கொண்டு சென்றான்.

அவ்வாறு தெருக்களில் விலை கூறவே தெருவிலே எதிர்ப்பட்டவர்கள் இவ்வாசகத்தைக் கேட்டு மனம் நொந்தார்கள். வெள்ளை முப்புரி நூலணிந்த ஒரு மறையவன் அரிச்சந்திரனைப் பார்த்து உன்னுடைய மனைவிக்கும், மகனுக்கும் விலையாக நீ விரும்புகிற பொருள் எவ்வளவு அதனைக் கூறுவாயாக என்று கேட்டான். அரிச்சந்திரன் அம்மறையவனைப் பார்த்து யானை முதுகிலே நின்று எறிகின்ற கவணில் உள்ள கல்லானது போகும் அளவிற்குச் சரியாகப் பொருள் கொடுத்தால் அதவே இந்த இரண்டு பேருக்கும் விலையாகும் என்று சொன்னான். சரி என்று அம்மறையவன் ஒப்புக் கொண்டு விலைப் பொருளை வாங்கிக் கொள்ளுகிறவனை இங்கே கூப்பிடு என்று வினவ உடனே அரிச்சந்திரன் சுக்கிரனைக் கூப்பிட்டு நீர் எனக்குக் கொடுக்க வேண்டிய பொருளை இந்த அந்தணனுக்குக் கொடும் என்று கூறினான். பிறகு விலைச்சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு இருவரையும் கொடுத்தான்.

அப்போது சந்திரமதி தன் கணவனை வணங்கிப் போற்றி எங்களுக்காக நீர் வருத்தப்படவேண்டாம். உமது திருமுகத்தை இன்று நான் இறுதியாகப் பார்க்கிறேன். இனிமேற் காண்பது

எந்நாளோ என்று தாயும் சேயும் பலவாறாகப் புலம்பினார்கள். பிறகு இருவரையும் விலைக்கு வாங்கிய மறையவன் இழுத்துச் செல்லவே அரசனை அமைச்சன் ஒருவாறு தேற்றினான்.

அரிச்சந்திரன் சுக்கிரனைப் பார்த்து என்னாலே உமக்குச் சேரவேண்டிய பொருள் வந்து சேர்ந்து விட்டதா எனக்கேட்க அதற்குச் சுக்கிரன் நீ முனிவர் விசுவாமித்திரர் எனக்குக் கொடுக்கவேண்டிய கூலிப்பொருளை ஏன் தரவில்லை என்று கேட்டான். அரிச்சந்திரன் உமக்குங் கொடுக்கிறேன் என்னோடு வாரும் என்றுகூறி, தன் அமைச்சனைப் பார்த்து என்னை நீ விற்று இந்தச் சுக்கிரனுக்கு கூலிப்பொருள் கொடு என்று சொன்னான். அமைச்சன் சத்தியகீர்த்தி இது என் தீவினை என மனம் நொந்து, அரசனை வாங்கிக்கொள்ளுமாறு தெருக்கள் தோறும் விலை கூறிக்கொண்டு திரிந்தான். அப்பொழுது வீரபாகு என்ற பெயரையுடைய ஒரு பறையன் எதிர் வந்தான். அவன் அமைச்சனைப் பார்த்து உங்களுக்கு வேண்டிய பொருளைக் கொடுத்தால் எனக்கு இத்தொழிலாளரை விலைக்குக் கொடுப்பீர்களோ என்று உசாவினான். அவ்வாறு வீரவாகு கேட்கவே அரிச்சந்திரன் அமைச்சனைப் பார்த்து இந்த நகருக்குள்ளே நமக்குத் தக்க விலை கொடுத்து வாங்கக் கூடியவன் இவனே யன்றி வேறொருவனும் இரான். எனவே என்னை இவனுக்கே விற்றுவிடு என்றான். சரி என்று அமைச்சன் ஒப்புக் கொண்டு வீரவாகுவைப் பார்த்து பதினாயிரம் பொன் தர வேண்டும் என்று கேட்டான். உடனே விலைச் சீட்டு எழுதிப் பெற்றுக் கொண்டு, அந்தப் பணத்தைப் பெற்று சுக்கிரனுக்கு கொடுத்து அனுப்பிவிட்டான்.

வீரவாகு அரிச்சந்திரனைப் பார்த்து, சுடுகாட்டிலே வருகிற பிணங்களை யெல்லாம் சுடுந்தொழில் எனக்குரியது. இத் தொழிலை உன்னிடம் தருகிறேன். பாடைமேலே கொண்டு வந்து வைத்த பிணத்தைச் சுடுகிற பணமும், கொள்ளியாடையும் வாங்கிச் சேர்த்து எனக்கு அனுப்பிவிட்டு, வாய்க்கரிசியை மட்டும் உன் உணவுக்கு வைத்துக் கொள் என்று கூறி அவனை சுடுகாட்டிற்குக் காவலனாக அமர்த்தி விட்டான்.

அரிச்நந்திரன் சுடுகாடு காக்குந் தொழிலில் ஈடுபட்டிருந்தான். அரிச்சந்திரன் மகனையும், மனைவியையும் விலைக்கு வாங்கிய அந்தணன் மிகுந்த வேலைகளைக் கொடுத்து அடிமையாக நடத்தினான். இவ்வாறு நடந்து வருகிற நாளிலே ஒரு நாள் லோகிதாசனைப் பார்த்து அந்தணன் தருப்பைப்புல் பறித்துவர அனுப்பினான். அவ்வாறு தருப்பைப்புல் பறித்துவர தன் நண்பர்களுடன் சென்ற லோகிதாசனை, விசமாத்திரர் ஏவுவதால், தருப்பைக்குள் அடங்கியிருந்த பாம்பானது தீண்டவே, லோகிதாசன் அவ்விடத்திலேயே தன் நண்பர்களிடம் சொல்லிவிட்டு, உடனே உயிர் விட்டான். இதனைக் கண்ட அவன் நண்பர்கள் ஓடிவந்து சந்திரமதியிடம் சொல்லவே, அவள் அலறிப் புடைத்துக் கொண்டு, அந்தணனிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு தன்மகனின் உடலைத் தேடிச் சென்றாள்.

பிறகு ஒருவாறு மகனின் உடலைத் தேடிப் பிடித்து ஓவென்று அலறிக் கொண்டு கீழே விழுந்தாள். தாமரை மலர் போன்ற தன்னுடைய கைகளினாலே மகனை எடுத்து மடிமீது வைத்துக் கொண்டு தேவர்களும் மயங்கி வருந்துமாறு வாயைத் திறந்து புலம்பலானாள்.

இவ்வாறு புலம்பிய சந்திரமதியானவள் இந்த மகனுடனே நானும் இறந்தேனேயானால் இப்பிள்ளையை எடுத்துக் கொண்டு போய் எரித்து அடக்கஞ் செய்யத்தக்கவர் எவரும் இல்லை என்று நினைத்து மகனையெடுத்துக் கொண்டு சுடலைக்குப் போகிறாள். சுடுகாட்டிற்குள்ளே நுழைந்த சந்திரமதி தன் மகனுடைய பிணத்தை வைத்து விட்டு அங்குக் கிடந்த குறைக் கொள்ளிக் கட்டைகளையெல்லாம் பொறுக்கிச் சேர்த்து தன்மகனை அதன்மேல் வைத்து எரித்தாள். அப்பொழுது மூண்டெரிந்த நெருப்பு வெளிச்சத்தினால் அதனை அரிச்சந்திரன் பார்த்தான். விரைவாக ஓடிவந்தான். வந்ததும் தன் மனைவிதான் அவள் என்று அவனுக்குத் தெரியாது. எனவே அவன் சந்திரமதியைப் பார்த்து மூடத்தன்மை உடையவளே எனக்குக் கொடுக்க வேண்டிய பொருளைக் கொடுக்காமலே நீ ஒருத்தியாக வந்து இந்த இரவில் கள்ளத்தனமாக பிணத்தை சுடுவது தகுதியாகுமோ என்ற கூறி

எரிகின்ற தன் மகனுடைய பிணத்தைக் காலால் உதைத்து, அப்புறம் போய் விழும்படிச் செய்தான். தன்குழந்தையின் பிணத்தை அவ்வாறு உதைத்துத் தள்ளவே சந்திரமதியானவள் உயிர் சோருமாறு அழுது, புலம்பி தன் கணவன்தான் அவன் என்பதை அறியாமல் அவனுடைய அடிகள் இரண்டையும் பற்றிக்கொண்டு பலவாறாகப் புலம்பினாள்.

இவ்வாறு புலம்பிய சந்திரமதியைப் பார்த்து அரிச்சந்திரன், என்னுடைய கால்களை விடு. நான் சுடலைக்குரிய புலையன் என்று எண்ணாதே புலையன் அல்லன் சுடுகாட்டிற்கு உரிமையுள்ள புலையனுக்கு அடிமையாவேன். என்னுடைய கால்களை நீ தொடுவது தகாது. மேலும் காற்பணமும், கொள்ளியாடையும் நீ கொடுத்து விட்டு உன்னுடைய விருப்பம் போல் சுட்டுக்கொள். என் பங்குக்கு உரியதான வாய்க்கரிசியை மட்டும் வாங்காமல் விட்டு விடுகிறேன் என்று கூறினான். மீண்டும் சந்திரமதி என்னிடம் தருவதற்கு ஒரு பொருளும் இல்லை என்று மேலும் அவனுடைய உள்ளம் இரங்குமாறு பல மொழிகளைக் கூறிக்கொண்டு நின்றாள்.

அதனைக் கண்ட அவன் சந்திரமதியைப் பார்த்து நீ பேசிய மொழிகள் எல்லாம் பொய்யானவை. செம்மையான பொன்னால் செய்யப்பட்ட மங்கலநாண் உன்னுடைய கழுத்திலே இருக்கும் பொழுது என்னிடத்திலே ஒன்றுமில்லையென்று கூறுவது சிறிதும் பொருந்தாது. உன்னுடைய கழுத்திலே இருக்கிற தாலியை என்னிடம் கொடுப்பாயாக என்று கூறினான்.

எக்காலத்திலேயும் வருத்தத்தை அடையாத என் தலைவராகிய அரிச்சந்திர மன்னருக்கேயல்லாமல் பிறர் எவராலுங் காணமுடியாத எனது திருமங்கல நாணானது புலையன் காணவும் ஆகிவிட்டதே என்று புலம்பிய வாசகத்தைக் கேட்டு, அரிச்சந்திரன் அவள் உண்மையில் தன்னுடைய மனைவியாகிய சந்திரமதியே என்றும், இறந்தவன் தன்மகன் என்றும், தெரிந்து கொண்டு தன்னைத்தானே ஒருவாறு தேற்றிக் கொண்டான்.

இருப்பினும் தன் மகனை நினைத்து பலவாறாகப் புலம்பினான். இப்புலம்பலைக் கேட்ட சந்திரமதியானவள் தன்

கணவன் அரிச்சந்திரன் இவனே என்று ஐயமற அறிந்து கொண்டாள். உடனே தன் மன்னனின் அழகிய திருவடிகளை பிடித்துக் கொண்டு நீர் இத்துன்பங்களையெல்லாம் எண்ணி மனங்கலங்க வேண்டாம். அறம் ஒன்றையே உறுதியோடு நினைப்பீராக என்று கூறினாள். இவ்வாறு சந்திரமதி கூறவே, அரிச்சந்திரன் சந்திரமதியைப் பார்த்துப் பெண்ணே கேட்பாயாக, நான் இச்சுடுகாட்டிற்குரிய பறையனுக்கு அடிமை. ஆகவே அவனுடைய கட்டளையைக் கடந்து அவன் பொருளை நான் வாங்காமல் விட்டால் அஃது அறநெறியில் நின்றும் வழுவுதலாகும். ஆகவே நீ அந்தணனிடம் கூறிப் பொருள் பெற்று வந்து, ஈமக்கடனைச் செய்வாயாக என்றான். உடனே சந்திரமதி மன்னா இப்பொருளைக் கொடுப்பதற்கு அவன் சிறிதும் எண்ணமாட்டான். இருப்பினும் போய்க் கேட்டுப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லி மகனுடைய பிணத்தை அவ்விடமே விட்டு விட்டு விரைந்து சென்றாள்.

அந்தணன் வீட்டுக்குச் செல்லும் வழியில், காசி மன்னனுடைய குழந்தை வேறொருவனால் கொலை செய்யப்பட்டுக் கிடந்ததைப் பார்த்து சந்திரமதி தன் குழந்தையோ என அருகில் செல்ல அதனைச் சந்தர்ப்ப வசத்தால் கண்ட காவலர்கள் இவள் தான் கொலை செய்திருப்பாள் என்று அரசனிடம் இழுத்துச் செல்ல, பல்வேறு நிரூபணங்களுக்குப் பிறகு அரசன் இவளை, வெட்டிக் கொல் சுடுகாட்டில் காவல் புரியும் வீரபாகுவை அழைத்துவர ஏற்பாடு செய்தான். உடனே வீரவாகுவும் வந்து அரசனுடைய கட்டளையை சிரமேற் கொண்டு அவளை தன் சேரிக்கு அழைத்துச் சென்று அரிச்சந்திரனைக் கூப்பிட்டு அவனிடத்தில் ஒப்புவித்து, இந்த ஊர் அரசனுடைய பிள்ளையைக் கொண்டு போய் உடலை பிளந்து உயிரைப் போக்கிய கள்ளியாகிய இவளை நீ கொலை செய்யுமிடத்திற்குக் கொண்டுபோய் உடலற்ற முண்டந் துள்ளியோடுமாறு வெட்டுவாயாக என்று கூறிச் சந்திரமதியைக் கொடுத்து வள்ளல் தன்மை பொருந்திய அந்த அரிச்சந்திரனிடத்திலே வீரவாகு தன் கையில் இருந்த வாளையுங் கொடுத்தான்.

அரிச்சந்திரன் தன் விதியின் வலியை நொந்து நகர மக்கள் காணுமாறு, தன் மனைவியான சந்திரமதியை, மகன் லோகிதாசன்

கிடக்கும் சுடுகாட்டிற்கு அழைத்துவந்து, சந்திரமதியே நீ வழக்கப்படியே வணங்குகிற தெய்வத்தை வணங்கிக் கொண்டு இருப்பாயாக என்று கூறினான். சந்திரமதி தான் வழக்கமாக எப்பொழுதும் வணங்கும் தன் தலைவனாகிய அரிச்சந்திரனையே போற்றி வணங்கிக் கொண்டு, தன் தலைவனைப் பார்த்து, அரசே, நான் என்னுடைய உயிரை இழந்து போவதற்காக அஞ்சாது தாங்கள் நிலையென்று எண்ணித் தங்களுடைய அருமையான தவத்தையும் தருமத்தையும் மெய்மையையும், விட்டு வருத்தமடைய வேண்டாம். உங்களுடைய வழிமுறையும் வாய்மையில் சிறந்தோங்குக என்று வாழ்த்திக் கிழக்கு முகமாக இருந்தாள்.

அரிச்சந்திரன் தன்னுடைய ஒளி பொருந்திய வாளை வலது கையில் எடுத்து, உலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் பசுபதியே ஒப்பற்ற முதற்கடவுளானால், அறங்கள் பலவற்றுள்ளும் மெய்ம்மையே ஒப்பற்றதென்றால், அம்மெய்மையையே நான் விரதமாகக் கொண்டிருப்பது உண்மையானால், அந்தமெய் சொல்லுகிற வழியையே விரதமாகக் கொண்ட என்னை நீங்காத நிறை குணம் இவனுக்குண்டாகியிருந்தால் இவள் சாவாமையைப் பெறக்கடவள். இவைகளெல்லாம் இல்லையென்றால் இவள் சாவைப் பெறக்கடவள் என்று கூறிச் சந்திரமதியின் கழுத்திலே வாளைக் கொண்டு வெட்டினான். வெட்டிய கூறிய வாளானது இரண்டாவது திருமணத்திற்கு இட்ட மாலையாகச் சந்திரமதியினுடைய கழுத்திலே விழுந்தது. இங்ஙனம் நடந்த பின்னர் முத்தேவர்களும், பிறரும் அங்கு கூடினார்கள். வாத்திய முழக்கத்தோடும் மலர்மாரியோடும் வந்து கூடிய தேவர்களையெல்லாம் அரிச்சந்திரனும், சந்திரமதியும் கண்டு கட்டிலடங்காத களிப்புக் கொண்டார்கள். அவ்வாறே சத்தியகீர்த்தி; காசிராசன் முதலியோர்களும் அவ்வாறே களிப்புக் கொண்டனர்.

பிறகு சிவபெருமான் அருளாலே லோகிதாசனும், காசிராசன் மகனும் உயிர்பெற்று எழ, விசவாமித்திரர், சிவபெருமான் கட்டளைக்கிணங்க, இந்திரன் சபையில் வசிட்டரும், தாமும் போரிட்டது முதல் நடந்த அனைத்தையும் எல்லோரும் அறிய விளம்பினார். மேலும் நான் தான் தோற்றுவிட்டேன், வசிட்டர்

வென்றுவிட்டார். எனவே ஆராய்ந்து பார்த்து உணராமல், உம்மையும் அரிச்சந்திரனையும் நான் இகழ்ந்து பேசியவைகளையெல்லாம் நீங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று வசிட்ட முனிவருக்கு நல்ல இன்மொழிகள் நவின்றார். அரிச்சந்திரன் மகனையும், சந்திரமதியையும் தெளியச் செய்தார். சத்தியகீர்த்தியான அமைச்சனையும் வாழ்த்தினார். பிறகு தாமிருக்கிற நாட்டை நோக்கிச் சென்றார் விசுவாமித்திரர்.

மணம் வீசுகின்ற சடையை உடைய சிவபெருமான் அரிச்சந்திரனைக் களிப்புடன் பார்த்து அரசனே நீ அயோத்தி நகரத்திற்குப் போய்க் குற்றந்தீர முடி சூடிக் கொண்டு அரசாட்சியை மேற்கொள். இந்த விசுவாமித்திரர் செய்த தவதிற் பாதியையும் பெற்றுக்கொள். பிறகு நம்முடைய பதத்திற்கு வந்து சேர் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்படியே அரிச்சந்திரன் அயோத்தி நகரத்தார் எதிர் கொண்டு அழைக்க, இந்திரன் முடி சூட்டிவைக்க, மீண்டும் அரிச்சந்திரன் மனைவி, மகனுடன் அரசாட்சியை மேற்கொண்டான்.

....

பாட்டு முதற்குறிப்பு அகர வரிசைப் பட்டியல்

அ	பக்க எண்
அடவியிலே	19
அடிமறு	43
அந்தணர்	32
அந்தணர் மைந்தர்	33
அந்தமானை	11
அய்யயோ	32
அய்யோமகனே	37
அரகரா	36
அரத்தினுங்	6
அருமறை	9
அன்னபார்	1
அன்னமே	13
அன்னமே	15
அன்னையாம்	34
அன்னையை	26
ஆ	
ஆசிலாத்திருவைப்	26
ஆடல்	19
ஆறடி	35
இ	
இட்ட	11
இப்பொழுது	18
இந்தக்காட்டிற்	20
இந்திரன்	45
இந்திரா	17
இந்திரன் சபையில்	1
இலகிய	4
ஈ	
ஈசனே	44
உ	
உண்டவ	15

உன்னையன்	44
எ	
எடுத்து நீ	14
எனைக்கொல்ல	30
என்னாலாவதிங்கே	23
என்பதம்	9
என்னிள	13
என்ன செய்வேன்	35
என் பாக்கியஞ்	16
ஏ	
ஏது செய்வேன்	27
ஏற்குமோ	26
ஐ	
ஐவரை	5
ஒ	
ஒரு கையிற்	4
க	
கடலெலாம்	6
கண்ணாற	40
கண்டகாரியமோ	32
களவுகண்	40
காசிப்பட்டணத்தில்	23
காட்டினில்	36
கும்பிடு	16
கூரிருளந்த	34
கொடும்புவி	32
கொடியிடை	13
கொண்டவர்க்	34
கோசிக	7
கோட்டமிடு	7
கோவித்திருக்கன்	18
கோவித்தென்னை	19
கையிலென்	43
சங்கராசிவனே	42

சங்கரா போற்றி 44
சத்திய 7
சத்தியவாசக 22
சந்தனாங் 29
சந்திரமதியே 12,21,32,33,
37
சிந்தையில் 10
சினமுனிக் 38
செய்தவத் 9
செய்யவ 26
சொல்லுமிசையும் 15

த

தகைப்படு 12
தந்தபொன்னிது 29
தந்தையே 5
தந்தனை 10
தரவிதி 37
தவமுனி 18
தலையவிழ் 10
தாரணியிற் 24
துன்னு 39
தூசுபடைத்த 31
தேவகந் 3

ந

நவமதாதியென 13
நன்மை 28
நாட்டிற் 11
நாமினிச் 13
நாலிரண்டு 37
நான்மறை 34
நிருபர்கள் 8
நிற்றவம் 39
நெஞ்சக 14
நெடுந்தெருத் 25

ப

பசுவினை	27
பஞ்சின்மேல்	40
படித்திடும்	15
படுதுயரெல்லாம்	38
பத்தினி	25
பறையனா	31
பறையனே	31
பாடியப்	14
பாரச்சிலையும்	11
பாவியென்	10
பாவியே	20
பிணந்தின்னி	40
பிரிந்துசெல்	42
பெண்டிரை	25
பெண்டுநான்	27
பைந்தொடி	7
பொன்னனை	30
பொன்னிய	17
பொன்னுலக	2
பொறுபொறு	43

ம

மதிவளர்	1
மரவுரி	4
மன்னனே	11
மன்னனே	17
மன்னர் மன்னவனே	12
மன்னர் மன்னவனே	21
மன்னர் முன்	38
மாதவம்	6
மாமதி	23
மாமுனி	44
மானியல்	42
மானிலந்	6

மின்னுமணி	3
முடிசடை	4
முடிமலர்	26
மெய்ப்புறப்	15
மேவியிற்	41
மைந்தனை	38

வ

வண்ணமா	7
வந்தனம்	9
வாசல்	8
வாலமதிநுதல்	41
விந்தை	8
விலைகூறினேன்	24
வீதியிற்	31
வெற்றிமா	8
வேதாள	22
வேதியர்	32